ஞாயிறு வெளியீடு ஆண்டு சந்தா ரூ. 5 தனிப்பிரதி 0—1—3 REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 காஞ்சிபுரம் 21—4—46 இதழ் 1

## ரங்கோன் ராதா!

சௌமியன்.

"ஜப்பானியனின் குண்டுகள் அங்கு விழாமலிருந்தால், அவளை நீ கண்டிக்கவே முடியாது! திரைகடல் கடந்துசென்றே அந்தத் தேவியைத் தரிசிக்கவேண்டியிருந்திருக்கும். அது உன்னால்தான் முடியுமா, எனக்குந் தான்முடியுமா அவளுடைய 'கேட்ட காலம்,'' அவளை இப்படியாக்கிவிட்டது'' இது என் நண்பன், தன் அடுத்த வீட்டுக்குப் புதிதாக வந்து சேர்ந்த சிங்காரியைப்பற்றி என்னிடம் கூறியது.

என்நண்பன் நாகசுந்தரம் இதிலே தேறியவன். எங்கெங்குஎழிலுள்ள மங்கையர் உள்ளனர், அவர்களின் நிலைமை என்ன, என்ற அட்டவணை அவனிடம் உண்டு. பிரதி தினமும், கோயிலுக்கு அவன்போய்வருவது, தேவபூஜைக்கா! தேவிகளைத் தரிசிக்கவேதான்! அவன்தான்எனக்கு ரங்கோன் ராதா விஷயமாக முதலிலே கூறினன். வந்துபார்த்தால் தான் என்மனம் திருப்தியாகும் என்று என்னை வற்புறுத்தினன்.

"நான் அவளைக் காண்பதால் உனக்கென்னப்பாதிருப்தி?'' என்று நான், சிரித்துக்கொண்டே கேட்டேன். "இது பெரிய பிரச்னையாகி விட்டதோ உனக்கு? சங்கீத வித்வான் "சபாஷ்''என்ற மொழியைச் சபையிலே எதிர்பார்க்கிருரே, அது ஏன்? அவருடைய கீதத்தை ரசித்தவர்கள் இருப்பது தெரிந்தால் அவருக்குஆனந்தம்! அதுபோலத்தான் எனக்கும். நான் கண்டுபிடித்த அந்தச் சுகுமாரியை நீ ஒருமுறை பார்த்து "பேஷ்'' என்று பிரேமையும் பெருமூச்சும் கலந்துகூறினல், என் திறமைக்கு அத்தாட்சி'' என்றுன் நாகசுந்தரம். நகைச்சுவையுடன் பேசுவான் என் நண்பன். "அடுத்தவீட்டு அரம்பை எப்படிப்பட்டவள்? கூறு, கேட்போம். பிறகு பார்ப்போம்'' என்று நான் கேட்டேன். கூறுவதா? கவியா நான், அவளைஉனக்குக்கருத்தோவியந் தீட்டிக்காட்ட. ரங்கோன் ராதா, ரசவல்லி, ரம்பை, மின்னற்கொடி, என்று அடுக்குமொழிகளை ஆரம்பித்தான். போதும்! போதும்! கம்பா! அங்கமங்கமாக வருணிக்கத் தொடங்கி விடாதேயப்பா! இங்கு சடையர் இல்லை, உனக்குச் சொர்ணபிஷேகம் செய்ய. நாளை மாலை, உன்வீட்டு மாடியிலேஉலவ வருகிறேன். அந்த உல்லாசியைக் காண்போம்.'' என்று நான் வாக்களித்தேன். நண்பன், வேறு விஷயம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, சென்றுவிட்டான். என் மனதிலே அவன் தூவிய எண்ணம், அன்றிரவு,முளைவிட்டு, செடியாகிக்கொடியாகிக், காதற்பூவும் பூத்துவிட்டது. கண்டதும் காதல் என்றனர் கவிகள்! நானே அவளைக் காணவுமில்லை; கேட்டேன் அவளைப்பற்றிய வர்ணனையை, உடனே எனக்கோர்விதமான "ஆசை'' பிறந்தது! என்ன பித்தம்! வாலிப சித்தத்தை அடக்கும் கடிவாளம் எது? மனம்போன போக்கை மாற்றிக்கொள்ளும் திறமைதான் எது? ரங்கோன்ராதா! ராதா என்ற பெயரே, ரசமாகத் தோன்றிற்று! ரங்கோன், ரசமான இடமாமே! அன்றிரவு, அடிக்கடி விழித்துக்கொண்டேன், ராதாவை எண்ணி எண்ணி. என் நண்பனே என்னைக் கேலி செய்வான், அத்தகைய திடீர்க் கொந்தளிப்பு என் மனதில்! பாபம்! அவள் யாரோ! குண்டுகளுக்குப் பயந்து, இங்கு வருகிருள், அவள் மீது பாணம் பூட்ட நான் கிளப்புவதா? சிச்சீ! கெட்ட நினைப்பு நமக்கு ஏன்? என்றும் எண்ணினேன், கெட்ட நினைப்பு என்று இதை எப்படிக் கூற முடியும், பெண்ணிடம் பிரேமை கொள்வது ஆணின் இயற்கை, இதைநான் மாற்ற முடியுமா? நான் என்ன, கிடைக்கும் தையலைத் தூக்கித் தலைமீது வைத்துக்கொண்டு தாண்டவமாடப்போகிறேனு சிவனர் போல்! ராதையும் என்னைக் கண்டு"மோகித்தால்'' நானென்ன, மகாவிஷ்ணுபோல், அலைகடலில் ஆலிலைமேல் படுத்துக்கொண்டு, அந்த ஆபத்கான இடத்துக்கா பிரியவதியை அழைப்பேன். இரண்டடுக்கு மாடி என்வீடு! இந்தஆண்டு மட்டும் என்தகப்பனர் வியாபாரத்திலே 70-ஆயிரம் சம்பாதித்தார். இளைஞன் நான்! எழில் ஒன்றும் மட்டல்ல! என்ன குறை ராதாவுக்கு! என்றும் எண்ணினேன்.

ராதையே நீ என்னை நேசிப்பதாலுன்னை—என்ற கீதம்—ராதையின் மோகன கோபாலா என்ற பாடல்—ராதாரமணு என்றபஜனை—ராதா ருக்மிணிசமேதா என்ற பாகவத மொழி, ராதாபாய் என்ற நடிகையின் பெயர்—என்மனதிலே ராதா, ராதா என்று, பலப்பல விதத்திலே எண்ணம் கூத்தாடிற்று.

காலை மலர்ந்தது, அதற்கு என் கஷ்டம் தெரிகிறதா! கணக்குப் புத்தகமும் கையுமாகக் கடையிலே உட்கார்ந்துகொண்டிருந்தேன், மாலை வழக்கப்படி உலவச் சென்றேன்—வழக்கமான இடத்துக்கு அல்ல! நாகசுந்தரனின் வீட்டுக்கு.

"விளையாட்டுக்குச் சொன்னுய் என்று எண்ணினேன். நிஜமாகவே வந்துவிட்டாயே'' என்று நாகசுந்தரம் கூறினன். கேலி செய்வது போலிருந்தது அவன் பேச்சு. என்ன இருந்தாலும், "பிகுவை'' விட்டுவிடலாமா? செச்சே! நான், அதை மறந்தே விட்டேனப்பா! வழக்கப்படி உலவப் புறப்பட்டேன். உன்னையும் அழைத்துப் போகலாமென்றுதான் இங்கு வந்தேன்'' என்று சமாதானங் கூறினேன். முதுகைத் தட்டிக்கொடுத்து, "எவ்வளவு பாசாங்கு பேசுகிருயடா பரந்தாமா!'' என்றுகூறி என்னைக் கேலிசெய்து, மாடிக்கு அழைத்துச்சென்று, அந்த மங்கையைக் காட்டுவான் என்று நான் கருதினேன். ஆனல், நாகசுந்தரம் "சரி போவோமா! கோயிலுக்கா, ஆற்றோரமா?'' என்று கேட்டுக்கொண்டே, தெருவில் இறங்கிவிட்டான். நான் அடைந்த ஏமாற்றத்தை என்னென்பது. என்நண்பனின் திடீர்மாறுதலின் காரணம் எனக்குப் புரியவில்லை. அவனைக் கேட்கவோ மனம் வரவில்லை. 'சரி! ரங்கோன் ராதாவை நாம்பார்க்கக் கூடாது என்றுஇவன் கருதுகிருன். அவளிடம் இவன்எண்ணம்வைத்துவிட்டான் போலிருக்கிறது' என்று எண்ணினேன். கோபந்தான் எனக்கு. எனவே, மனிதனின் சுயநலம், கபடம், மாதரால் உண்டாகும் மயக்கம், ஆகியவைபற்றிக் காரசாரமாகப்பேசினேன். என் கோபத்தைத் தீர்த்துக்கொள்ள வேறு வழி இல்லை, என் செய்வது. ராதையைக் காணுததால், என்மனதிலே மூண்ட ஆவல்மேலும் அதிகரித்தது. அன்றிரவும் வேதனையை அநுபவித்தேன். அனுவசியமாக அவளைப்பற்றிக்கூறுவானேன்,என் உள்ளத்திலே ஏதேதோ நினைப்பு வருமாறு செய்வானேன், பிறகு இவ்விதம் என்னைவாட்டுவானேன். உண்மை நண்பனின் காரியம் இப்படியா இருப்பது!என்றுஎண்ணிச் சலித்துக்கொண்டேன். ராதா எப்படி இருப்பாளோ, என்ற எண்ணம்வேறு, எரிமலையிலிருந்துகிளம்பும் நெருப்பெனக், கிளம்பி என்னைத் தகித்தது.

ராதாவுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்! அவள், மணமானவளாகக்கூட இருப்பாள் ஒரு சமயம். அவன்தான், அழகான ஒரு பெண், ஆபத்தான நேரத்திலே, பர்மாவிலிருந்து வந்துவிட்டாள் என்றுமட்டுந்தானே என்னிடம் சொன்னுன். வேறு தகவல் தெரியாதே. அவளை விசாரிக்கவும் முடியாது போய்விட்டது. அவன், திடீரென மாறியேவிட்டான். என்னிடம் பேசுவதைக்கூடக்குறைத்துக் கொண்டான். வீட்டிலேயும் அதிகம் தங்குவதில்லை. பிறகு, நானே ராதாவைப்பற்றி அவனைக் கேட்க வேண்டி நேரிட்டது. "ஒரு நாளில் கூறமுடியாது அப்பா, அந்தக் கதையை! பலநாளாகும். அதிலும், நீ யாரிடமும் அதைக் கூறுவதில்லை என்ற உறுதி மொழி தந்தால்தான் சொல்வேன்.,, என்றுன், "சரி! சொல். இப்போது ராதா எங்கே? அடுத்த வீட்டில்தானே?'' என்று அவசரமாகக் கேட்டேன். என் நண்பன், என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "நீ அவளைக் காதலிக்கிருயா?'' என்று கேட்கவே, நான் சிரித்துவிட்டு, "என்னடா பித்தம் பிடித்தவன்போலப் பேசுகிருய். அவளைநான்கண்டதுமில்லை! காதலாம் காதல்'' என்று கூறிக் கேலிசெய்தேன். என் நண்பனின் முகமோ, மிகக் கவலையுடன் இருந்தது. சில விநாடி மௌனமாகஇருந்துவிட்டு, அவன் என்னை உற்று நோக்கியபடி, "நண்பா! நீ ராதாவிடம், தூய்மையான முறையிலே நடந்துகொள்வதாக வாக்குத் தரவேண்டும். பிறகு ராதாவிடம் நீ பழகலாம்.'' என்றுன், சோகக்குரலில்.

என்நண்பனின்போக்கு எனக்கு ஆச்சரியமூட்டியது. எவ்வளவுதுன்பத்தையும் சகித்துக்கொள்பவன், எவ்வளவு துயரச்செய்தியைக் கூறினும், "சகஜம்'' என்று கூறுபவன், அப்படிப்பட்டவன், ராதா யார்? எங்கே இருக்கிருள்? என்ற சர்வசாதாரண விஷயத்தைப்பற்றி, ஏன் இப்படிக்கவலையும் கலக்கமும் கொண்டவனுகப் பேசுகிருன்,என்பது புரியவில்லை. "என்னடா இது, விளையாடுகிருயா? ராதா, கலியாணமானவளா? எதையோ மறைக்கிருயே! என்னிடம்கூடச்சொல்லக் கூடாத பிரமாதமான இரகசியம் என்னடாப்பா அது?'' என்றுநான் கேட்டேன், கொஞ்சம் கோபமாகத்தான்.

நாகசுந்தரம், இதுபோல நான் எப்போதாவது கொஞ்சம் கோபித்துக்கொண்டால், சிரித்துக் கொண்டே என்முதுகில் தட்டுவது வழக்கம். அன்று, பின்புறமாகக் கையைக்கட்டிக்கொண்டு,மௌனமாகவே நடந்தான், என் கோபப் பேச்சைக் கேட்டபிறகும். "சரி, அவ்வளவுதான் உன் சிநேகிதத்தின்யோக்யதை.யாரோ ஒருபெண், ரங்கோன்காரி, அவள்விஷயத்திலே உனக்கு இவ்வளவு....................'' என்று நான் மேலும் கொஞ்சம் சூடாகப்பேசலானேன், நாகசுந்தரம் என்னைக் கெஞ்சுபவன்போலப் பார்த்து, "ராதா விஷயமாகக் கோபத்திலே கண்டபடி பேசிவிடாதே அப்பா. ராதா,என் தங்கை'' என்றுன். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "உனக்குத் தங்கை ஏது?'' என்று நான்கேட்டேன், திகைப்புடன். நண்பன் பதில்கூறவில்லை. என்னுடைய வற்புறுத்தல், அவனுக்குவேதனையைஉண்டாக்குவதை அவனுடைய முகம் நன்ருகக் காட்டிற்று. அவன், அந்த மர்மத்தை விளக்கிக்கூறுவிட்டாலொழிய, என்வேதனை குறையாது என்று எனக்குத் தோன்றிற்று. எனவே நான், வாஞ்சையுடன், நாகசுந்தரத்தை அணைத்துக்கொண்டு, 'நாகு! என்னடா இது, விடுகதை பேசுகிருய்? உனக்குத் தங்கை கிடையாதே. ராதாஎன்பவள், ரங்கோனிலிருந்துவந்த பெண் என்று நீயே கூறினுயே. இப்போது,"ராதாஎன் தங்கை'' என்று கூறுகிருயே. இது

**மூல வியாதிகளுக்கு யௌவன பிராஷ்**

**கருணைக்கிழங்கு லேகியம்! ஆப்ரேஷன் பயன்தராது**

மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல்,குத்து,வலி, மலபந்தம்,வாய்வு பவுத்திரக் கட்டிகள், 3-வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து சுகம் காணலாம். இதுபோல்எந்த மருந்திலும் சுகம் காணமுடியாது.

**12 நாள்யௌவன பிராஷ் ரூ. 3 சரஸ்வதிவைத்தியசாலை பழனி, S. I.**

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—

T. N. சொகலிங்கம்பிள்ளை மருந்து ஷாப் மதுரை.
தி. மெடிகல் & ஜெனரல் ஸ்டோர்எஜன்ஸி பொள்ளாச்சி.
R. S. வாசன் & Co கெமிஸ்ட் திருப்பூர்.
சரஸ்வதி மெடிக்கல் ஸ்டோர், நாமக்கல்.


## ரங்கோன் ராதா

1-ம் பக்கத் தொடர்ச்சி

என்ன வேடிக்கை? விபரீதமாக இருக்கிறதே! என்னிடம் கூடவா நீமறைத்துப்பேசவேண்டும்'என்று கேட்டேன்.

நண்பனின் கண்களிலே நீர் கொப்பளித்தது. ஆத்திரத்துடன் பேசினான்,"ஆறுமாதத்துக்குமுன்பு நீ பெருந்துறைக்குப் புறப்பட்டாயே, அப்போது நான், எங்கே போகிறாய் என்று கேட்டேனல்லவா ?" என்றான். "ஆமாம்" என்றேன் நான், பெருந்துறைப் பிரயாணத்துக்கும், ராதாவுக்கும் என்ன சம்பந்தம் என்று ஆச்சரியப்பட்டு. "பெருந் துறைக்குப் போகிறேன் என்று ஏன் என்னிடம் உண்மையைச்சொல்லவில்லை? என் உன்நண்பனிடத்திலேயேஉண்மையைமறைத்தாய்?" என்று கேட்டான். "போடா, பிரமாதமான தவறு கண்டுபிடித்துவிட்டாய்! நீயோ, மிகவும் இளகியமனதுள்ளவன். எனக்கு இரண்டொரு மாதங்களாக இருமலாகஇருந்தது, சில டாக்டர்கள் அது எலும்புருக்கியோ என்று சந்தேகத்தைக்கிளப்பினார்கள். பெருந்துறைசென்றுபரீட்சித்துக்கொண்டு வருவோம் என்று கிளம்பினேன். உன்னிடம் அதைச்சொன்னால் நீ உண்மையிலேயே எனக்கு எலும்புருக்கிநோய்கண்டுவிட்டதுஎன்று எண்ணிக் கஷ்டப்படுவாய் எனப் பயந்து, பெருந்துறை போவதைச் சொல்லவில்லை. அதற்கும்இதற்கும் என்னடாசம்பந்தம்?" என்றுகேட்டேன்.

"அதேபோலத்தான் இதுவும். உனக்கொரு சந்தேகம், நோயைப் பற்றி. என்னிடம் சொன்னால்நான் உனக்கு நோயே இருப்பதாகஎண்ணிக்கொள்வேன் என்று பயந்து உண்மையை மறைத்தாய். அதுபோலவே, நான் ராதாவைப்பற்றி உண்மையைக் கூறப் பயப் படுகிறேன், நீ அவளைப்பற்றித்தாழ்வாக மதிப்பிட்டுவிடுவாயோ, என்னையும் கேவலமாக எண்ணிக்கொள்வாயோ என்று. அவளைப்பற்றி நான் கண்டறிந்தவிஷயம் இருக்கிறதே, அதைநான் மறைக்கவேண்டியவனாக இருக்கிறேன். அந்த விஷயமும், எலும்புருக்கி நோய் போன்றதுதான்" என்றான் நாகசுந்தரம். "பைத்யக்காரா, நான் பெருந்துறைக்குப் போன பிறகு, எனக்குச்சாதாரண இருமலே தவிர, எலும்புருக்கி அல்ல என்று தீர்மானமாகிவிட்டது, தெரிந்ததல்லவா? இதோ காளை போல இருக்கிறேன்" என்றுநான் சொன்னேன். 'ஆமாம்! அதேபோலத்தான், காதல் சிகிச்சைச்சாலையிலே ராதா பரிசோதிக்கப்பட்ட பிறகுதான், அவள் மாசற்றவள் என்று தீர்மானிக்கமுடியும். அதற்காகத்தான் உன்னைக்கேட்டேன், நீராதாவைக்காதலிக்கிறாயாஎன்று. இப்போதும் சொல்லு, அவளைப் பற்றியமுழு உண்மையைக் கூறுகிறேன்" என்றான்.

"இப்படியும் ஒரு நிபந்தனை உண்டா? கட்டுக் கதைகளிலே வருமே, ராஜகுமாரன் தூங்கிக் கொண்டிருந்தான், ஒரு மாயாவி அவனை அப்படியே கட்டிலோடு தூக்கிக்கொண்டுபோய், ஒரு ராஜகுமாரிவீட்டிலே கொண்டுபோய்ச் சேர்த்து இருவருக்கும் கலியாணம் செய்து வைத்தான் என்று. அது போல இருக்கிறதே, உன் கலியாண ஏற்பாடு" என்றுநான்கேட்டேன்.

அவ்வளவு சோகத்துக்கிடையிலும் கொஞ்சம் சிரிப்பு வந்தது நாகசுந்தரத்துக்கு.

"நண்பா! நான் நம்பிக்கையில்லாமல் சொல்லவில்லை, ராதாவை நீ கண்டால், கட்டாயம் காதலிப்பாய்!" என்றான். "அதை எப்படி நீ கண்டுபிடித்தாய்?" என்று நான் கேட்டேன்.

"ஏன் முடியாது நீ அடிக்கடி, உன் இலட்சிய மங்கையைத்தான் எனக்குக் காட்டி இருக்கிறாயே, வயது இருபது இருக்கவேண்டும் என்பாய், ஒருவயது ஏறத்தாழ இருக்கும் ராதாவுக்கு. அடக்கம் இருக்கவேண்டும், ஆனால் அசடாக இருக்கக்கூடாது, புத்தி இருக்க வேண்டும்,ஆனால் போக்கிரித்தனம் கூடாது, அழகு இருக்கவேண்டும், ஆனால் ஆளை மயக்கும் நோக்கம் இருக்கக்கூடாது, படிப்பு இருக்கவேண்டும், ஆனால் படாடோபம் இருக்கக்கூடாது, சகஜமாகப்பழகவேண்டும், ஆனால்சந்துபொந்து திரியும் சுபாவம் கூடாது, என்று கூறுவாயே கவனமிருக்கிறதல்லவா?" என்று கேட்டான். உண்மைதான், நான் அடிக்கடி, இப்படிப்பட்டவளைத்தான் நான் கலியாணம் செய்துகொள்வேன் என்று சொல்வது வழக்கம். இந்த இலட்சியப் பெண்ணைப்பற்றி நான் அடிக்கடி பேசினதற்குக் காரணம், நான் பலதடவை கேட்ட "வாழ்க்கை ஒப்பந்தத்தை"ப் பற்றிய பிரசங்கங்களல்ல; என்மாமன் மகள் வதனு, இந்த இலட்சணத்துக்கு நேர்மாறாக இருந்தாள், அவளை எனக்கு மனைவியாக்குவதற்கு இருகுடும்பத்திலும் விசேஷமானமுயற்சி. அந்தக்கோபத்திலே நான்தீட்டிய இலட்சியமங்கையை, நாகசுந்தரம் எனக்குக் கவனமூட்டினான்.

"ஆமாம்! அப்படிப்பட்டபெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்வேன். கேலியா உனக்கு? நீ வேண்டுமானால்பாரேன்." என்று நான் வீரமாகப் பேசினேன்.

"கேலியல்ல, பரந்தாமா! நீகுறிப்பிடும் அந்த இலட்சணம் அவ்வளவும் பொருந்தியவள் ராதா. அதனால்தான் நான் தைரியமாகச் சொன்னேன், அவளைக் கண்டால் நீ கட்டாயம் காதலிப்பாய் என்று. ராதா பத்தாவது தேறியிருக்கிறாள், இப்போது கல்லூரியில்படிக்கிறாள். கல்லூரிப்படிப்பு, கால் கூந்தலும் காலில் அலங்காரபூட்சும்,காமினியாஸ்நோவும், இல்லாமல் கூடவரும் என்பதை ராதா கல்லூரிப் பெண்களுக்குக் காட்டுவதற்குப் போயிருக்கிறாள்" என்று நாகசுந்தரம் சொன்னான்.

"ஆஹா! நீ மட்டும், இந்த 56 தேசத்து அரசர்கள் இருந்தகாலத்திலே வாழ்ந்திருந்தால், தூது போகும் வேலையில் வேறு யாரும் உனக்கு நிகர் இல்லை என்றாகியிருக்கும்"என்று நான்கேலிசெய்தேன்.

"பரமா! உன் மனதிலே இவ்வளவு காலமாக உலவிக்கொண்டிருந்த இலட்சியப் பெண், ராதா தான். நீ கூற மறந்த குணங்கள் கூட அவளிடம் காண்பாய். அவளுடைய முகத்திலே இருக்கும் லாவண்யம், உன் கற்பனைக்கு எட்டாதது. கண்டால்நிச்சயமாகஎன் காலடி வீழ்வாய்" என்றான் நாகு.

"அவளைக் கண்டால் உன்காலடி வீழ்வானேன்? என்னடா நாகு! ஒன்றுக்கொன்றுபொருத்தமேஇல்லாமல் பேசுகிறாயே!" என்றுநான் கேட்டேன். என் நண்பனின் போக்கு, மேலும் மேலும் விசித்திரமாவது கண்டு. "தங்கையைக் கலியாணம் செய்துகொள்ள, அண்ணனின் தயவு வேண்டாமோ?" என்று கேட்டான் நாகசுந்தரம். "அண்ணனா? ராதாவுக்கு நீ எப்போது அண்ணனானாய்" என்று நான் முதுகைத் தட்டிக்கொடுத்தபடி கேட்டேன்.

"பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு!" என்றான் அவன்.

"டே! நாகு! வீணாக என்னைக் குழப்பாதே,ராதா யார்?" என்று கேட்டேன்.

"என்தங்கை" என்று பெருமூச்சுடன் கூறினான். என்திகைப்பைக் கண்டு, மெள்ள, சிரமப்பட்டுப் பேசலானான்.

நண்பா, அந்தப்பெரியகதையைச் சொல்லவும் எனக்குக் கூச்சமாக இருக்கிறது, இருந்தாலும் சொல்லாவிட்டாலோ, மனதிலுள்ள பாரம் நீங்காது. ராதா, என்தங்கை தான், திடுக்கிடாதே! ராதாவுக்கு இவ்விஷயம் தெரிந்தபோது ஆச்சரியப்பட்டாள். பூராக்கதையையும் கேள்விப்பட்டால் நீயும் ஆச்சரியப்படுவாய் ஆனால் முதலிலே நீ அவளைச்சந்திக்கவேண்டும், பழகவேண்டும், உனக்கு ராதையிடம் பிரேமை பிறந்தால், நான் முழு விவரத்தையும் கூறுகிறேன் இல்லையானால், மௌனமாகத்தான் இருக்கவேண்டும். யார், ராதாவை உள்ளன்போடு நேசிக்கிறானோ எவனொருவன் அவளைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறானோ, அவனிடமே ராதையின் பரிதாப வரலாற்றைக்கூறவேண்டும் என்று தீர்மானித்துவிட்டேன். ராதை, என் தங்கைஎன்று தெரிந்தஉடனே நான், அவளை மேல்படிப்புக்காகச் சென்னைக்குக் கல்லூரிக்கு அனுப்பிவிட்டேன். ஹாஸ்டலில் இருக்கிறாள். பணவசதிசெய்துவிட்டேன், மிக அடக்கம், நல்ல குணம், படிப்பு, பழக மிக மேன்மையானவள்; என்றாலும், உலகின் முன், ராதா என் தங்கைதான் என்று பெருமையுடன், பூரிப்புடன் கூறிக்கொள்ள முடியாது. கண்ணாடியிலே தெரியும் பொருளைக் கையிலே தொட முடியுமா! காலத்திரை எனக்கும் என் தங்கைக்கும் இடையே நிற்கிறது. அதைக் கிழித்தெறியும்தைரியம் எனக்கு இல்லை. ஆனால், என் தங்கையின் எதிர்கால வாழ்வு, கௌரவமானதாக, நிம்மதியாக இருக்கவேண்டும், அவ்விதம் இருக்கும்படி செய்யவேண்டியது என் பொறுப்பு. ராதா என் தங்கை— உலகம் அதை ஒப்பமறுக்கும்; என் உள்ளமோ, அந்தக் கருத்தைத் தழுவி பூரித்தது." என்றான், அவனுடைய மொழியிலே, அவன் உள்ளத்தை ஏதோ ஓர் இரகசியம் மென்று தின்றுகொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது.

(அடுத்த இதழில்)

## பாரதிதாசன் நிதி

இவ்வாரம், பாரதிதாசன் நிதிக்காகத் "திராவிட நாடு" காரியாலத்திற்குப் பணம் அனுப்பியவர்களின்விபரம் கீழே தரப்படுகிறது:—

தஞ்சை A. Y. அருளானந்தசாமி நாடார் ரூபா 101–0–0; தஞ்சை A. Y. S. பரிசுத்த நாடார் ரூபா 61–0–0;

பத்து ரூபா அனுப்பியவர்கள்:—

திருப்பூர் கே. கந்தசாமி திருப்பூர் எ. சின்னுசாமி திருப்பூர் எம். கே. சவுண்டப்பன், சென்னை சி. டி. நாயர், சென்னை பி. ஆர். கண்ணப்ப முதலியார், ரெட்டிப்பட்டி வா. சு. வெங்கடசாமி.

பதினொரு ரூபா அனுப்பியவர்:—

சென்னை பி. சத்தியமூர்த்தி.

ஐந்து ரூபா அனுப்பியவர்கள்:—

சென்னை கே. சுப்பிரமணியம், கே. வெங்கட்ராமன், இ. பஞ்சநாதன், கே எம். எல். ரேச், டி. செல்வகணபதி. ஒ இராமலிங்கம், பி.ஜே. ஜாகொப், எஸ். கணபதி, கே. ஆர். தாஸ், திருப்பூர் ஆர். கிருஷ்ணசாமி, எம். சுப்ரமணியம். வி. சோமசுந்தரம், எஸ். ஆர். பழனிச்சாமி, மைசூர் சிவராம்பேட்டை கே. என். கந்தசாமி, வி. ஆர். எ. பாலகிருஷ்ணன், கே கே. ஆறுமுகம், எம். பி. ஆர். பெருமாள்சாமி, ஓ. மோ. முத்துச்சாமி, கே. எம். சி. சுப்பராமன், வாமா, காளியண்ணன், அ நாச்சிமுத்து சென்னை உ. மா. பொன்னன், வலங்கை கே சாமிநாதன், சென்னை சி. வி. திரிபுராந்தகம்.

ஏழு ரூபா அனுப்பியவர்:—

சென்னை கே. வரதராசுப்பிள்ளை.

மூன்று ரூபா அனுப்பியவர்கள்:—

மாத்தூர் எம். ஆர். இராசகோபால், சென்னை கா. சு. கருப்பண்ணன்,

இரண்டு ரூபா அனுப்பியவர்கள்:—

பொன்மலை பி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை கு தேவராசுலு, க. கண்ணன் திருப்பூர் ஆர். இராமசாமி, கே. தாயம்மாள், சென்னை ஜி. கே. இராமச்சந்திரன், பி. பரமசிவம், எம். டி. பார்த்தசாரதி டி. இராஜராம், எ. சண்முகவடிவேல், எ சுகுணேந்திரபாபு ஓ. சி. தணிகாசலம்.

ஒருரூபா அனுப்பியவர்கள்:—சென்னை ஆர். எதிராசன், டி. ஆறுமுகநாதன், எ. சி. பார்த்தசாரதி ஆர். சாமிநாதன் தி. மோ. கோதண்டராமன், கே. அரங்கநாத ராவ் சி. எஸ். சம்பந்தம், பி. எம். சீத்தாராமன், எல். வெங்கட்ட ராவ், குப்புசாமி, வி. நே. ஜீவரத்தினம், பி. துரைசாமி, எம். பாலேஸ்வரன், ஆர். கண்ணன், இரத்னாசு, சாலமன், கே. வீரபத்ரன், மோகனசுந்தரன்,மேகநாதன் எல். கோதண்டராமன், ஆர். கிருட்டினமூர்த்தி. எஸ். வி. எ. டி. அரங்கசாமி, எஸ். கே. ஜானகிராமன், ஜே. எஸ். கன்னியப்பன், எஸ். வி. பாலாஜிராவ், கே. ஆர். கோவிந்தராஜுலு, கே. இராமகிருஷ்ணன், எஸ். திருவேங்கடம், என். சக்ரபாணி, எஸ். அண்ணாமலை, கே.கண்ணன், பி. டி. சம்பந்தன், என். தாமோதரம், பி. முனிசாமிராஜா, எம். எம். ராவ், ப. சம்பந்தன், எம் சுந்தரேசன், டி. ஜே. நாராயணசாமி, ஆர். மாணிக்கம். வி. பி. பாபு, கே. கண்ணன், கே. இராசநாய்க்கர், ரெட்டிப்பட்டி இரா—சுப்பு, சிவராம்பேட்டை கே. கொண்டப்பன், பி. நீலகிரி, என். எ. நடேசன், பி. நஞ்சப்ப முதலியார், திருப்பூர் எஸ். வள்ளியம்மாள்.

பனிரண்டணா கொடுத்தவர்கள்:—

பி. என். தங்கவேல், வி. சம்பந்தன்.


தந்தி:- "புறுமார்க்" திருச்சி.



# சொன்னோம்! சொல்கிறார்கள்!!

★

"எதற்காக நீங்கள் வீணுக்குக் கஷ்டப்பட்டு எதை எதையோ பேசுகிறீர்கள்? உங்கள் பேச்சை யார் கேட்கிறார்கள்? யார்மதிக்கிறார்கள்? ஏன், வீண் பிரயாசை!"

நண்பர்களிலும் சிலர், நையாண்டிக்காரர்களும் சரி,' இதைக்கூறுகிறார்கள், திராவிடர் கழகப்பிரசாரத்தைக் கேட்டு. அவர்களுடைய நினைப்பெல்லாம், திராவிடர் கழகப்பிரசாரம், பத்திரிகைகளிலே பிரமாதமாகக் காணப்படுவதில்லையே, ஆகையால், இவர்கள் பேச்சினாலே, பலன்என்ன ஏற்படும், ஏன் பாவம் பேசிக்கொண்டே இருக்கவேண்டும், என்பது தான்.

பலன் இல்லை பேச்சுவெறும் காட்டுக் கூச்சலாகிறது என்று உண்மையில் நிலைமை இருந்தால், எந்தப் பைத்யக்காரனாவது அதேவீண் வேலையிலே இருப்பானா?

இந்தக்கேள்வியை, நையாண்டி செய்பவர்கள், எண்ணிப் பார்ப்பதில்லை.

திராவிடர் கழகம், செய்கிற பிரச்சாரம், வீண்போகவில்லை என்பது மட்டுமல்ல, அந்தப்பிரசாரத்தைப் பழித்தும் எதிர்த்தும் யாரார்வேலை செய்கிறார்களோ, அவர்களே, அறிந்தோ அறியாமலோ, சிலநாட்களுக்குப் பிறகு, அதே பிரச்சாரத்தைப் புரியத்தொடங்கி, நமது வேலையைக் குறைத்து வைக்கும், நல்ல காரியம் செய்கிறார்கள். சுருக்கமாகக்கூற வேண்டுமானால், சொன்னோம்! சொல்கிறார்கள்!! என்று கூறவேண்டும். நாம், என்னென்ன கொள்கைகளைச் சொன்னோமோ அவைகளை எல்லாம் அந்தந்தச் சமயத்திலே, எதிர்த்துப் பேசினார்கள்; உண்மை; ஆனால் அதே எதிர்ப்பாளர்கள், நாம் சொன்னதையே, சிலகாலம் கழித்துத் தாங்களே சொல்லஆரம்பித்து விட்டார்கள்; அறிந்து சொன்னாலும் சரியே, மறந்து சொல்லியிருந்தாலும் சரியே, விஷயம் ஒன்றே தான். நாம் சொன்னோம், அவர்கள் சொல்கிறார்கள். சந்தேகமா? சரி சில எடுத்துக்காட்டுகள், கவனியுங்கள்.

## I

ஆச்சாரியார், பிரதம மந்திரியாக இருந்தபோது, அவருடைய ஆட்சிப் போக்கு, சர்வாதிகார முறையிலும் அதிகாரவர்க்கத்துக்குத் தாளம் போடுவதாகவும் இருக்கிறது என்று நாம்சொன்னோம். கண்டித்தனர் நம்மை காங்கிரஸ் நண்பர்கள்.

இன்று? ஆச்சாரியார்—காமராஜர் சச்சரவின் காரணமாக, அன்று நாம்ஆச்சாரியாரைப் பற்றியும் அவருடையஆட்சிப் போக்கைப் பற்றியும் என்னென்ன சொன்னோமோ, அவைகளை ஒன்றுவிடாமல், காங்கிரஸ் அன்பர்கள் சொல்கிறார்கள், உண்மை அல்லவா? நாம் சொன்னோம் (முன்பு); அவர்கள் சொல்கிறார்கள் (இன்று). நமது முயற்சி வீணாகவா போயிற்று?

## II

நமக்குள்ளே சண்டையும் சச்சரவும் இருந்தால், நாம் யாராவது ஒரு அன்னிய நாட்டானுடைய பாதுகாப்பைத் தான் தேடித்தீரவேண்டி இருக்கும், என்று நாம் சொன்னோம். அடே! குலாம்! என்று நம்மைக் கண்டித்தனர் வீரர்கள். சென்றவாரம், அரிஜன் இதழிலே காந்தியாரே, இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார். வீண்வேலையா, நம்முடைய பிரசாரம்? யோசியுங்கள்.

## III

பிரிட்டன், சுயாட்சியைத்தரச் சித்தமாகிறது, நமக்குள்தான் ஒற்றுமை வேண்டும், இங்கே பிளவு இருப்பதால் தான் சுயராஜ்யம் கிட்டவில்லை, என்று அன்று சொன்னோம். இன்று, காங்கிரஸ் தலைவர்களெல்லாம், பிரிட்டன் சுயராஜ்யம் தரச் சித்தமாகிவிட்டது, நமக்குள் ஒற்றுமை இருந்துவிட்டால், சுயராஜ்யம் பெறுவதிலே, சங்கடமே இல்லை, நிச்சயம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். நமது வேலை வீணாகி விட்டதா? கூறுங்கள் மனமிருந்தால்.

## IV

"அப்பா! காங்கிரசின் மூலாதாரக் கொள்கைகளுக்கும், கம்யூனிஸ்டு கொள்கைக்கும் ஒட்டிவராது, என் இரண்டும் ஒன்று என்றுகூறி வருகிறீர்கள். உங்கள் நேசம் நீடிக்காது என்று, அன்றுசொன்னோம். இன்று இருசாராரும் அதைச் சொல்கிறார்கள். நாம் விழலுக்கா நீர் இறைத்தோம்; பயிர் கண்டோமே! சொன்னோம்! சொல்கிறார்கள்!

## V

இராமராஜ்யம் என்று பகழ்கிறார்கள், ராமர், தவம்செய்த தமிழனைக்கொன்ற தாக்கதை இருக்கிறதே. தசரதன்மகன் ராமன், ஆண்டவகை சரியல்லவேஎன்று நாம் சொன்னோம், அடே! பாவி!என்று தூற்றினார்கள். இப்போது காந்தியார் சொல்கிறார் நான் கூறும்இராமன், தசரத குமாரனல்ல! ஒரு இலட்சிய புருஷர் என்று. அதாவது தசரத இராமனைக் காந்தியார் கைவிட்டு விடுகிறார். நாம் சொன்னோம் அவர்கள் சொல்கிறார்கள், உண்மை இதுதானே.

## VI

தமிழ்நாட்டுக் காங்கிரசின் "தலைவிதியை" நிர்ணயிக்கும் உரிமையை, வடநாடு வைத்துக்கொண்டிருக்கிறது, இது எதேச்சாதிகாரம், இது கூடாது, தமிழரின் சுதந்திரம், சுயமரியாதை இதனால் சூறையாடப்படுகிறது என்று முன்பே சொன்னோம். கேலி செய்தனர். இன்று, காமராஜர்—ஆச்சாரியார் தகராறு வந்த உடனே, மேலிடம்—சூழ்ச்சிகள்—படேலின் சர்வாதிகாரம்—தமிழ் மாகாண சுதந்திரம், என்பதெல்லாம் பேசப்பட்டு, எழுதப்பட்டுவருகின்றன. சொன்னோம்! சொல்கிறார்கள்!!பலிக்காமலாபோயிற்று நமது வேலை.

## VII

பிரிட்டிஷாரை ஓட்டப்போவதாகச் சொல்லி ஓட்டுவாங்கிக்கொண்டு போய் மந்திரிமார்களான, தோழர்கள் கோபால ரெட்டி இராமநாதன் முனிசாமிப்பிள்ளை ஆகிய மூவரும், ஒரு தினம் ஒரு சர்க்கார் ரோடில் கலந்துகொண்டு யூனியன்ஜாக் கொடிக்குச் (பிரிட்டிஷ் கொடி) சலாம் செய்தார்கள். இதுதானா, வெள்ளைக்காரனை எதிர்க்கும் இலட்சணம்? என்று கூறினோம், பதவிமோகத்தால் வீரத்தை இழந்துவிட்டனர் என்று சொன்னோம்; கோபம் வந்தது காங்கிரஸ் அன்பர்களுக்கு; ஏப்ரல் 16-ல் தினசரியில் காங்கிரஸ் தோழர் ரஹீம் என்பவர் இந்தச் சம்பவத்தை எடுத்துக்காட்டி, இதனால் தேசிய மானமே அடகுவைக்கப்பட்டது என்று கண்டித்துஎழுதியிருக்கிறார். நாம் அன்றுசொன்னோம், அதை இன்றுஅவர்கள் சொல்கிறார்கள்!

## VIII

"தீண்டாதார்" எனப்படுபவரை கோயிலிலே நுழையச் செய்தால்மட்டும் என்ன பலன்? அதனாலே, கோயிலுக்கு வருமானம்தான் அதிகரிக்கும் என்று சொன்னோம்; இப்போது மதுரைக் கோயிலில் பழங்குடி மக்களுக்கு உள்ளே போகும்உரிமைதரப்பட்டதால், கோயில் வருமானம் அதிகமாயிற்று என்று கோயில் அதிகாரி சொல்கிறார். நாம் சொன்னதைச் சொல்கிறார்கள்.

## IX

"தீண்டாதார்" கோயில் நுழைவுமட்டும் போதாது; ஜாதிவித்யாசம் இருப்பதேகூடாது என்று சொன்னோம்; அன்பர் பி. ஸ்ரீ என்பவர் தினமணியில்,

"அரசியல் விடுதலைபோல் சமுதாயவிடுதலையும் இன்றியமையாதது. இந்தஇரண்டும் தேசப் பொது வாழ்வின் இரண்டு மூச்சுப் பைகள். ஹரிஜனப் பிரச்னையைத் தீர்ப்பதோடு ஜாதி பேதங்களையும் தீர்த்துக்கட்டி விடுவதுதான் உண்மையான சமுதாய விடுதலை.

இந்தக் காலவேகத்திலே இந்த அணுக்குண்டு யுகத்திலே ஹரிஜனங்களுக்குஆலயப் பிரவேசம் மட்டும்போதும் என்று கருவதுவதுசரியன்று. ஒவ்வொருதமிழ்க் குழந்தையும் நான் பிராம்மணன், அப்பிராம்மணன், ஹரிஜன் என்று சொல்லாமல் நான் தமிழன் நான் இந்தியன் என்று சொல்லப் பழகிக், குறுகிய ஜாதி பேதங்களையும் வகுப்புவாத மனப்பான்மையையும் அறவே மறந்துவிடவேண்டும்."

என்று எழுதுகிறார். சொன்னதைச் சொல்கிறார்கள்! நமதுவேலை வீணாகவில்லை.

## X

ராமாயணம், நம்பமுடியாத ஆபாசங்கள் நிறைந்த கதை என்று சொன்னோம். இப்போது கலாரசிகர்கள், ஆமாம், கதையை நம்பமுடியாது, நம்பவேண்டாம், கவிதையின் அழகுக்காகப் படியுங்கள் என்று சொல்கிறார்கள்.

## XI

பிராமணர்—அல்லாதார் பேதமும் சச்சரவும், காங்கிரஸ்தேர்தலில்ஜெயித்துவிடுவதாலேயே மறைந்துவிடாது, அதே பிரச்னை காங்கிரசுக்குள்ளேகூட நுழைந்துவிடும் என்று சொன்னோம், அதனையே இன்று ஆச்சாரியார் உட்படச் சொல்கிறார்கள்.

## XII

காந்தியார் போதிக்கும் அஹிம்சை தத்துவம், வாயளவில் இருக்குமே தவிர, செயலுக்கு உபயோகமாகாது என்று சொன்னோம், சுபாஷ்பாபு ஆயுதமெடுத்தே சண்டையிடச் சொன்னார் தமது படையினருக்கு, ஜெஹிந்த் கோஷம் இன்று கேட்கப் படுகிறது. நாம் முன்பு சொன்னோம் இன்று அதையே சொல்கிறார்கள்.

இப்போது, ஆரியர்—திராவிடர் பிரச்னை—திராவிடநாடு தனிநாடு ஆக வேண்டியதன் அவசியம், வடநாட்டு பனியாக்கூட்டத்தின்பொருளாதாரவகாதிபத்யத்தால் வரும் கேடு, ஆகியவைகளைச் சொல்லிவருகிறோம்.

கேலி செய்யப்படுகிறோம்
நிந்திக்கப்படுகிறோம்
கண்டிக்கப்படுகிறோம்.

ஆனால், சகிப்புத்தன்மையுடன், அந்தக் கொள்கைகளைச் சொல்லிக்கொண்டுவருகிறோம் காரணம் என்ன?

இதுவும் நிச்சயம் பலிக்கும் என்ற நம்பிக்கை.

சொன்னோம்! சொல்கிறார்கள்!!

சொல்கிறோம்! சொல்லுவார்கள்!!

அந்த நம்பிக்கை இருக்கிற காரணத்தால்தான் திராவிடர்கழகம், நையாண்டி செய்பவர்கள் செய்யட்டும், அலட்சியமாகக் கருதுபவர்கள் கருதட்டும், நமது பணியை விடாமல் செய்வோம், பலிக்கும், என்ற உறுதியுடன் வேலை செய்கிறது.

திராவிடர் கழகத்தார் எந்தப்பிரச்னையைக் கூறினாலும், முதலிலே கேவலப்படுத்தவும், அலட்சியப்படுத்தவும், எதிர்த்துப்பேசவும், "சக்தி" திரட்டப்படும்; ஆனால், சிலகாலமானதும், அதேபிரச்னைகள், எதிர்த்தவர்களாலேயே, ஒப்புக்கொள்ளப்பட்டு, பிரச்சாரம் செய்யப்பட்டுவரும். இது திராவிடர்கழகத்தின் அனுபவம்.

நாட்டிலே தோன்றும் நானாவிதமான தோல்விகளுக்கும், பிரிட்டிஷார்மீதுபழி போடுவது, நமதுஒற்றுமைக்குறைவுக்கு, அவனையே காரணமாக்குவது, இந்து மதத்தின் சீர்கேட்டைக் கவனியாமல், இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்று பேசுவது, இவைகளெல்லாம், தவறு, என்று நாம் சொன்னோம். மதத்துரோகி! முஸ்லிமின் கூலி! என்று தூற்றினார்கள், இன்றோ! நாம் முன்பு சொன்னதைச் சொல்கிறார்கள்.

அறிஞர். வ. ரா. பிராமணர். "தமிழ் உலகம்" ஒரு தேசியத்தாள். 14ந்தேதி இதழில், இந்தப் பிரச்னையை அழகாகக் கூறுகிறார் அன்பர் வ. ரா. நாம்கூடக் கொஞ்சம் தாட்சண்ய பாஷையில் சொன்னோம்,அவர்கண்டிப்பானபாஷையிலேயே எழுதுகிறார். தலைப்பே, என்ன தெரியுமோ?

"ஏய்க்கிற வித்தை!" இதோ அவர் சொல்வது:

"ஒரு காரியம் சரியாக நடைபெறாமல் போய் அதனால் கேடுகள் விளைந்தால், உடனே, பிறர் பேரில் பழியைச் சுமத்தி, தாங்கள் தப்பித்துக்கொள்ளப்பார்ப்பது இப்பொழுது, இந்தநாட்டில் சகஜமாகப் போய்விட்டது. எதற்கெடுத்தாலும், இங்கிலீஷ் ஆட்சியினாலே இந்தியா நாசமாகப் போய்விட்டது என்று காரணம் சொல்லாத நேரமே இல்லை.

இந்தியாவுக்குள்ளே, இங்லீஷ்காரர்கள் ஏன் வரவேண்டும்? அதுயாருடைய தவறு? இங்லீஷ்காரர்கள்,இந்தியாவிலே, நூற்றைம்பது வருஷத்துக்கு மேலாக நிலைத்தது எதனாலே? அவர்களுடைய சாமர்த்தியத்தினாலா? அல்லது இந்தியர்களின் யோசனைக் குறைவினாலா? இங்லீஷ்காரர்கள் இந்தியாவிலே நிலைப்பதற்கான வசதிகளைத் தேடிக்கொடுத்தது யார்? அவர்கள் நிலைப்பதற்கானநிலைமை திடீரென்று ஏற்பட்டதா? அல்லது பல நூற்றாண்டுகளாக இருந்து வந்ததா?

இவைகளை எல்லாம் ஆராய்ச்சி செய்யாமல் இங்லீஷ்காரர்களைத் தூற்றுவதில் என்ன பிரயோசனம்? அவர்களின் பேரில் பழியைப் போடுவதால், நம்மவர்களின் திக்கற்ற நிலைமைக்கு விமோசனம் ஏற்பட்டுவிடுமா?

அவன் என்னை அடித்தான் என்று நான் சொல்லிக்கொண்டால், அது எனக்கு அவமானமாக இருக்காதா? அவன் ஏன் உன்னை 'அடிக்கவேண்டும் என்று கேட்கமாட்டார்களா? 'உனக்கு உடம்பிலே வலு இல்லை; ஆகவே, அவன் உன்னை அடித்தான்; அல்லது நீ தப்பிதம் செய்திருப்பாய், அதற்காக நீ தண்டனை அடைந்தாய்' என்று உலகம் என் முகத்தில் சமாதானத்தை விட்டெறியத்தான் செய்யும்.

இன்றைக்கு, பாகிஸ்தான்பேரில் ஆத்திரப்படுகிறவர்கள் ஒன்றை அடியோடு மறந்து விடுகிறார்கள். அயல் நாட்டிலிருந்து, இந்தியாவின் பேரில் படையெடுத்துவந்த முஸ்லிம்கள் எத்தனை ஆயிரம் பேர்கள்? அவர்களில் எத்தனை ஆயிரம் பேர் இந்தியாவில் தங்கி, முஸ்லிம் ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள்? இந்தியாவில், முதன் முதல் தங்கிய முஸ்லிம்கள் இருபதினாயிரத்துக்கு அதிகமாக இருக்காது இருபதினாயிரம் முஸ்லிம்கள், நானூறு வருஷத்துக்குள், பத்துக்கோடி முஸ்லிம்களாக ஆகிவிட்டார்களா?

ஹிந்து சமாஜத்தை விட்டுப் பிரிந்து, இஸ்லாமில் சேர்ந்த ஹிந்துக்களின் எண்ணிக்கையால்தான், இந்தியாவில், முஸ்லிம் ஜனத்தொகை, இந்த அளவுக்கு வந்துவிட்டது. லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் ஏன் இஸ்லாத்தை தழுவவேண்டும்? கத்தி முனையில், முஸ்லிம் மன்னர்கள், ஹிந்துக்களை இஸ்லாத்தில் சேர்த்தார்கள் என்று சிலர் சொல்லக்கூடும். போர் வாள் முஸ்லிம் மன்னர்களிடம் மட்டும்தான்இருந்ததா? ஹிந்துக்களிடம் இல்லையா? ஹிந்துக்கள் கோழைகளாகி, தங்களுடைய பொறுப்பை உணராவிட்டால் அதற்காகப்பிறர்பேரில்பழியைப் போட்டுவிட்டு, தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது மனுஷத்தனமாகுமா?

ஜின்னாவின் பாட்டனாரின் தகப்பனார் ஹிந்து. மகாகவி என்று கீர்த்தியுடன் விளங்கின ஸர் மகம்மது இக்பால் அவர்களின் மூதாதைகள் காஷ்மீரி பார்ப்பனர்கள். பஞ்சாபில் பிரதம மந்திரியாக இருந்து காலஞ்சென்ற ஸர் சிக்கந்தர் ஹயத்கான் அவர்களுடையமூதாதைகள், ஹிந்து ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் எல்லோரும் ஏன் இஸ்லாமைத்தழுவினார்கள்? ஹிந்துசமாஜத்தை விடும்படியாக இவர்களுக்கு என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டது? ஹிந்துக்களின் சமாஜம் ஏற்பட்டும் ஏன் அதை விட்டுப்போக வேண்டும்? பிராமண—பிராமணரல்லாதார் தகராறு ஏன் தோன்றவேண்டும்? இது இங்லீஷ்காரர்களின் வஞ்சகவேலை என்று ஆத்ம திருப்திக்காகச்சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தால், இந்த பிரச்னை தீர்ந்துவிடுமா?

வாழ்க்கையை ஏய்க்கிற வித்தையைமட்டும் பழகிக்கொண்டு, வாழ்க்கையில் துன்பம்தான் நிறைந்திருக்கிறது என்று சொன்னால், அதுஉண்மையாகுமா? அறிவாளிகளின் கூட்டத்தில், இந்தச் சமாதானம் எடுபடுமா? பரலோக வாழ்க்கைதான் பெரிது என்று பன்னிப்பன்னிப் பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு, இகலோக வாழ்க்கையைப்பற்றி கவலைஇருக்குமா?

ஆகவே, ஹிந்துக்கள் சோம்பிப்போய், உலகத்தார் ஏளனம் செய்யும்படியான நிலைமைக்கு வந்தால், அதற்கு யார் காரணர்கள்? அந்நியர்களா? ஏய்க்கிறவித்தையினால், எய்த்துக்கொள்ளுகிற வித்தையினால், மனிதன் முன்னேறிச்சென்று, மேம்பாடு அடைய முடியாது.

(6-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 21—4—46 [ஞாயிறு

## ஐந்தாம் ஆண்டு

★

"திராவிடநாடு,'' ஐந்தாம்மலரின் முதல் இதழ், தங்கள்கரத்தில்இருப்பது. கடந்த நான்கு ஆண்டுகளாகக் கடமையைக் களிப்புடன்நிறைவேற்றி வந்த, "திராவிட நாடு'' இனியும் அப்பணியினை ஆற்றும் உறுதியுடன், உமது உற்சாகம், ஆதரவு எனும்உறுதுணை தேடவந்துள்ளது. கொந்தளிப்பான நாட்களிலே தோன்றி, காலநிலைஎனும் கஷ்டங்களைத் தாங்கி, "திராவிடநாடு'' பணியாற்றி வந்திருக்கிறது; பணிபுரிய முன் வந்திருக்கிறது. அன்றுபோல் இன்றும், இன்றுபோல் என்றும் உமது ஆதரவை அருளக் கேட்டுக் கொள்கிறோம். இதுவரை, "திராவிடநாடு'' நமது இயக்கத்தவரிடமிருந்து பெற்றுள்ள ஆதரவும் உதவியும், பெரும் அளவுதான். அதற்கு நமது மனமுவந்தநன்றி, அன்பர்கட்கெல்லாம். இனியும் அந்த ஆதரவும், உதவியும் தேவை, மேலும் சில மடங்கு அதிகமாக. அன்பர்கள் அதனை அளிப்பர் என்று நம்புகிறோம்.

இயக்க ஏடுகளின் வாழ்வு, எதிர் நீச்சுக்காரனுடையது போன்றது. இன்பம் நிறைந்ததாகவோ எளிதான வகையில் வெற்றி பெறக்கூடியதாகவோ இருக்கமுடியாது. எங்கும் ஒரேவிதமான 'சேதி' யாகத்தான் இருக்கும். குடிஅரசு, திராவிடமணி, தொழிலாளர்மித்திரன், திராவிடநாடு ஆகிய அலுவலகங்கள் அ...த்திலும், ஒரேவிதமான நிலையையே இருந்து தீரும்; காரணம், இவை, மக்களுக்கு இனிப்புப் பண்டம் தயாரித்து விற்பனைக்கு அனுப்பும் வேலையில் ஈடுபடாமல், சிந்தனைக்குச்சற்றுச்சிரமமானவேலை தருவதுதான். இந்தப்பொது நிலையிலும், திராவிடநாடு, நாலு ஆண்டுகள் பணிபுரிந்து ஐந்தாம் ஆண்டு ஆரம்பமாகிறது.வளர்ச்சி, உற்சாகமூட்டக்கூடிய விதத்திலேயே ஏற்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சமுதாயத்திலே உள்ள ஜாதிச் சனியன். சனாதனக்கேடு, வைதிகக் கொடுமை, ஆகியவைகளை நாம் காணும்போது, நமது கண்களிலே அனலும் புனலும் தொப்பளிக்கிறது. எப்பாடுபட்டேனும், இவைகளைக் களைந்து எறியவேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது. மகத்தான வேலை. அதனை நாம்மேற்கொண்டு விட்டோம். அளவுநிலைமை கஷ்டநஷ்டக்கணக்கு இவைகளைக் கூடக் கவனிக்கவோ, இவைபற்றிக் கவலைப்படவோ கூட நேரமோ நினைப்போ இருப்பதில்லை. "போரிடு போரிடு! பொல்லாங்கை ஒழிக்கப் போரிடு! அநீதியை அழிக்கும்அறப் போரில் ஈடுபடு'' என்று உள்ளம், தூண்டியபடி இருக்கிறது. நம்மால் அந்த எழுச்சிக் குரலினின்றும் தப்ப முடியவில்லை.

"மிகப்பெரிய இக்காரியத்தைச் சாதிக்கத் . தேவையான அளவு பணம் இல்லையே, . வாழ்விலே நிம்மதி இல்லையே, வசதி இல்லையே, உதவி இல்லையே,'' என்று மனதுக்குக் கூறினலோ மனம், "ஆமாம்! அதனால் தான் உன்னை நீ ஒப்படைத்துவிடு இந்தக்காரியத்துக்கு. இதனால் உனக்கு என்ன கஷ்டம்வரும்? மாளிகை பறிபோகுமா? மிட்டா கலையுமா? ஆலை அழியுமா?சோலையில் உலவிடும் இன்பத்தை இழக்க வேண்டிவருமா? நீ இவைகளற்றவன், இழக்க என்ன இருக்கிறது உனக்கு? ஏன் உனக்குக் கலக்கம்? எழு! போரிடு!'' என்று மேலும், தூண்டியே விடுகிறது.

பன்னெடுங் காலமாக ஊறிப் போன கொள்கைகளை எதிர்த்து நடத்தும் புதுஅமைப்பு முறைக்கான பிரச்சாரம் மக்களின் செவி புகுமா என்பதே சந்தேகமாக இருக்கிறதே என்றால், "செவியிலே அல்லத்தவறு,உன்குரலிலே; அதைச் சரிப்படுத்து, இடைவிடாமல் எடுத்துக்கூறு, இதமாகக்கூறு, இன்னலுக்கிடையே இனிய முகத்தோடு இருந்து கூறு, இன்றே கூறு,கூறும் சக்தி உள்ளமட்டும்குறைகள்இருப்பதுபற்றிக்குமுறிக்கொண்டிராமல், கூறிக்கொண்டே இரு,'' என்றேஉள்ளம் வற்புறுத்துகிறது. பகுத்தறிவு இயக்கப் பணிபுரிவோனின் உள்ளம், அந்நிலைபெற்றுவிட்டது. அந்தப்பணியின், ஒருமுறை, ஒருவகையே, ஏடு. "திராவிடநாடு'' அறிவுப்புரட்சிக்காக ஆற்றலுடன் பணிபுரியும் அஞ்சா நெஞ்சன், வெஞ்சமர் பலகண்டமா வீரன், பெரியார் இராமசாமியின் எண்ணங்களை, நாட்டுக்கு எடுத்துக் காட்டும்ஏடு. திராவிடத்தனி அரசுக்கான புரட்சிமுரசு.

மகாராஜாக்கள்மண்டியிடச்சிற்றரசர்கள்சாமரம்வீசப் பிரபுக்கள் பாதம்தாங்க, பணியாக்கள் பல்லக்குத் தூக்க, பார்ப்பனர்கள் புகழ்கீதம்பாடப் பவனிவரும், பாசீசக்காங்கிரசோ, பழைமைக்கே பாடுபடும் ஸ்தாபனமாகி விட்டது. பலமும், அதற்கேற்ற அளவு எதிர்க்கட்சியை அழிக்கும் வன்மையும், அந்தஸ்தாபனத்துக்குஏற்பட்டுவிட்டது. ஏன்என்றுகேட்பார் இல்லை என்றநிலையில், எதையும்செய்யலாம் என்றமுறையில், நாடாளத்தொடங்கும் நாள்இது. மக்களின்நலன், இத்தகைய ஆட்சிமுறையினால் பாதிக்கப்பட்டால், கண்டிக்க, தடுக்க திருத்த ஏடுகள் அதிகம்இல்லை. அந்தப்பணிக்கு முன்னணி வீரனாகத்திகழ்வது "குடிஅரசு'' அதன் ஒலிபெருக்கி "திராவிடநாடு.'

விடுதலைக் கிளர்ச்சிக்கு, வித்து ஊன்றிவிட்டோம்; உழைப்புத், தியாகம் எனும் நீர்பாய்ச்சும் காலம் வந்துவிட்டது. "திராவிடநாடு'' அந்தக்காரியத்துக்கான திறமையையும், வலுவையும் பெறவேண்டும்; உங்கள் ஆதரவு பெருகினால், பெறும், என்று உறுதியாகக் கூறுகிறோம், எங்கெங்கு கொடுமை காணப்பட்டாலும், அங்கெல்லாம் நின்று போரிட்டுக் கொடுமையை ஒழிக்க வேண்டும் என்று "திராவிடநாடு'' விழைகிறது. பாட்டாளிகளின்பாதுகாப்பாளனாக, வாலிபர்களின் முரசொலியாக, விளங்க வேண்டும் என்று விழைகிறது.

ஆங்கில, ஆரிய, பனியா ஏகாதிபத்தியங்களின் ஆணிவேரைக்களைந்து எறியும் பணியில், 'திராவிடநாடு' தனக்குப் பெரும் பங்கு தர வேண்டுமென்று நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கிறது. அறிவுத்துறையில் அநேக நாட்களாக முளைத்துக்கொழித்துக் கிடக்கும் கள்ளி காளான்களைக் கல்லி எறிய வேண்டுமென்று ஆசைப்படுகிறது. கலையின் பெயரால் நடத்தப்படும் 'கபடம்' உடைபட்டாகவேண்டும், பழைமை பேரால் நடைபெறும் 'பாதகங்கள்'பொடிபடவேண்டும், எங்கும் எவருக்கும் உரிமை வேண்டும், விடுதலை வேண்டும், சமத்துவம் வேண்டும், இவைகளைக்காணப்பணி புரியவேண்டும்; அப்பணியிலேநமக்கோர்நல்லபங்கு வேண்டும், என்று 'திராவிடநாடு'கேட்கிறது. வெள்ளை ஏகாதிபத்யக்கோட்டைகளை, வேதியரின் அரண்களை, ஆரியக்கலைக்கூடங்களை, கற்பனைக்கடவுளருக்காகக் கட்டப்பட்டுள்ளகோட்டங்களை, அந்தப்பெயர் கூறிவாழும் கபடர்களின் குகைகளைத், "திராவிடநாடு'' தனது, சக்திக்கேற்ற அளவேனும் தாக்கித் தகர்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிறது. அந்தச் சக்தியை அதிகப்படுத்தும் பொறுப்பும் நிலையும் உம்முடையது. நாம், நமது குறிகோளைக் கூறினோம், நம்மை "வேலை வாங்கும்'' பொறுப்பு உம்முடையது. பணித்திடுக.

முடியுமா? நம் முன்காணப்படும் மாபெரும் அநீதியை அழிக்கமுடியுமா? என்று கேட்கத்தோன்றும்; நாமும் எண்ணியதுண்டு, திண்ணமாக நம்புங்கள், முடியும்! காட்டரசனை சிங்கத்துக்குப்பக்கத்தில்கைத்துப்பாக்கியைவைத்துப்பாருங்கள். (ஓவியத்தில்) சிங்கத்தின் வாலின் நுனியிலுள்ள கத்தை அளவு இருக்கும் கைத்துப்பாக்கி! கேலிச்சித்திரமாகத்தோன்றும். ஆனால், வல்லமையும் திறமையும் உடையவன் உபயோகித்தால், அந்தச்சிறுதுப்பாக்கி சிங்கத்தை வீழ்த்தும், சிங்கத்தை மட்டுமல்ல, மற்றப்பல துஷ்டமிருகங்களையும். பழைமைக் காட்டிலே, மதோன்மத்தரெனஉலவும்புராணப் புலிகளும், சனாதனச் சிங்கங்களும், கைத்துப்பாக்கி அளவான நமது பிரச்சார யந்திரத்தினால், நிச்சயமாகச்சாகடிக்கப்படும். இப்போதே கூட, அவை, 'தேசியத் தோட்டத்திலே' பதுங்குமிடங்கள் தேடிக் கொண்டதால், நமதுகுறிக்கு அகப்படாமல் தப்பித்துக் கொண்டுள்ளன. இன்னும் கொஞ்சநாட்கள் மட்டுமே, இந்தப் பதுங்கு மிடம் கிடைக்கும். பழைமைக்காடு அழிக்கப்படும் நாள், விரைந்து வந்து கொண்டே இருக்கிறது. 'திராவிடநாடு' இந்தப்பணியில் மும்முரமாக வேலை செய்யும். உலகிலே, நடைபெற்ற புரட்சிகளை உங்கள் முன் தீட்டிக்காட்டும் வீரர் வரலாறுகளை விளம்பும், விஞ்ஞானிகளின் சேவையைஎடுத்துரைக்கும், ஆரியம் புகா முன்னம் திராவிடர் வாழ்ந்த வகையைக்கூறும், இனித்திராவிடர் விடுதலை பெறவேண்டியதன் அவசியத்தையும் அதற்கான அறப்போர் மார்க்கத்தையும் எடுத்துக்கூறும். "திராவிடநாட்டிலே'' வெளிவரும், அச்சமற்ற கண்டனங்கள், தனி ஆட்கள்மீது கொண்ட குரோதத்தின் விளைவு அல்ல, வாலிப உள்ளத்திலே மூண்டெழும் தன்மானத்தீயின் பொறிகள்!

பத்திரிகையாளர் உலகிலேநமது பத்திரிகைகள் இடம் பெறு! எழுத்தாளர் உலகிலே, நமது "எழுத்தாளர்கள்'' காணப்படமாட்டார்கள். அந்நிலை ஆச்சரியப்படக்கூடியதுமல்ல, அருவருக்கத்தக்கதுமல்ல, ஆயாசப்படக் காரணமுமில்லை. சுராஜ்மல் லல்லுபாய் கம்பெனியில் சம்மட்டிக்கு இடம் கிடைக்குமா? "பளபளப்பும் ஜொலிப்பும்'' கொண்ட பத்திரிகை உலகிலே, பாசறைச் செய்திகளைத் தாங்கி வரும் நமது ஏடுகள் இடம் பெறத்தான் முடியாது. உங்கள்மனதிலே, அவை இடம் பெற்று விட்டால் போதும். அந்த மன்றத்தைவிட மதிப்பும் சக்தியும் வாய்ந்த இடம் வேறு இல்லை.

"திராவிடநாடு,'' அலங்கார அட்டைகள், அழகான படங்கள், சிங்காரக்காட்சிகள், சினிமா ரசங்கள், எழுத்தாளரின் எழிலோவியங்கள், ஏதுமற்றது. போருக்கான வாளுக்குப்பூவேலை இராதல்லவா! போகிகளின் கையிலேஉள்ள "செயினில்'' வைர இழைப்புத் தேவைப்படும். "திராவிடநாடு,'' போர்வாள்! அதனுடைய ஆற்றல், கூர்மையுப் பொறுத்தது!!

அன்பர்கள், "ஆண்டுஐந்தாகிறது, ஏன் இன்னும் 'திராவிடநாடு'கொஞ்சம் மேனிமினுக்குடன் வரலாகாது! முடியாதகாரியமா?'' என்றுகேட்டவண்ணம் உள்ளனர். அவர்களின் ஆவலையும் நாம் அடியோடு கவனியாமலிருக்கப்போவதில்லை. சிறிது சிறிதாக இதழின் தோற்றத்திலே, எழில்கூட்ட முயற்சிக்கிறோம். அச்சுப்பொறிக்கு, மின் உதவிகிட்டவில்லை. கேட்டிருக்கிறோம். கிடைத்ததும், காகித நிலைமையும் சரியானதும், கண்ணுக்குக் காட்சியாகவும் இருக்கும்படி, இதழைச் சித்தரிக்கிறோம். 'சூழ்நிலைகள்' தெளிவுபடட்டும்.

"திராவிடநாடு,'' கனதனவான்களின் காணிக்கையோ, வியாபாரிகளின் விளம்பரப்பணமோ பெற்று வாழ்ந்து வரவில்லை. அன்பர்கள் தரும் ஆதரவினாலேயே வாழ்கிறது, வளர்கிறது. எனவேதான், மகிழ்ச்சியுடன் உமக்கு நன்றிகூறும் இந்நாளில், மறவாமல் உமது ஆதரவை அதிகப்படுத்துக என்று கேட்டுக் கொள்கிறோம். கணக்குப்புத்தகம், கவலைக்கேற்ற சித்திரமாகத்தான் இதுபோதும்இருக்கிறது. சிறிதளவு அக்கரையை அதிகப்படுத்தினால், சீராக இருக்கமுடியும், நிலைமை. செய்க.

கருத்துள்ள கவிதைகள், காலத்தைக்காட்டும் கட்டுரைகள், சிந்தனைக்குரிய சிறுகதைகள், ஓவியங்கள், ஆகியவற்றைத்தீட்டி அனுப்புங்கள்; நாடு மீளவும், கேடு தீரவும், நாமினி இலங்கி நனிவாழவும்!

விடுதலைவீரர்களானநமதுதோழர்கள் நெடுஞ்செழியன், செழியன், அன்பழகன், வேதரத்னம், வேலன், புலவர் மாணிக்கம், ஆகிய அன்பர்களின், எழுச்சிமிக்க கட்டுரைகள், நமக்குச்சீமான்கள் தரக்கூடிய "செக்''குகளைவிட அதிகமான ஆனந்தத்தை அளிப்பன. அவர்களுக்கெல்லாம் நமது நன்றி.

புரட்சிக்கவிஞர், புதுவைச்சிவம், மற்றும் எண்ணற்ற புதுக்கவிதையாளர்கள், அடிக்கடி தந்துதவும், "கவிதைகள்'' நமக்கு மாளிகைவாசிகள் தரக்கூடிய 'பணத்தை'விட, மகிழ்வூட்டுவன. அவர்களுக்கு, நமது நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

கைவல்யம், அவர்களின் கருத்தோவியங்கள், நமக்குக் கிடைத்தற்கரிய கருவூலங்கள். தளர்ந்த உடல், முதிர்ந்த பருவம், ஆனால் ஆர்வம் கொழுந்துவிட்டு எரிந்தவண்ணம் இருக்கும், அவ்வீரர், "திராவிடநாட்டுக்''குச்செய்துவரும் பேருதவிக்கு எமதுமனமுவந்தநன்றிஉரித்தாகுக.

ஏஜண்டுகள், அனைவரும் இயக்கத்தோழர்கள்; அவர்கள், ஆற்றும் பணியும் காட்டும் ஊக்கமும், எமக்களிக்கும் உற்சாகமும், போற்றத்தக்கன; எமது நன்றி அவர்கட்கு. பொருளாலும், பிறவற்றாலும் 'திராவிடநாடு' வளர உதவிய அன்பர்கட்கெல்லாம் நமது நன்றியறிதலைக் கூறிக்கொண்டு, நாலு ஆண்டுகளாக நாம் ஆற்றிய தொண்டினை, மேலும் திறம்பட நடத்த, இந்த ஐந்தாம் ஆண்டினைத் துவக்குகிறோம் என்று கூறி, இந்த இதழினை உமக்குத்தருகிறோம், உவகையுடன்.

—●—

## "திராவிடமணி"

### அறிக்கை

இரவல்—கூலி அச்சுக்கூடக் கஷ்டம் காரணமாக "திராவிடமணி'' ஒழுங்காய் வெளிவருவது சிறிது காலமாய் தடைபட்டு வருகின்றது. 'திராவிடமணி அச்சகத்'திற்கென்றே சாமான்கள் வாங்கப் பெற்றுச் சர்க்கார் அனுமதிக்காகவே மூன்று மாதங்களுக்கு அதிகமாய்க் காத்துக்கொண்டிருக்கிறோமானபடியால் மேலும் இரண்டொரு வார தாமதங்களுக்கும் வாசகர்கள் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

டி. எம். முத்து,
ஆசிரியர்.

# சர்ச்சிலிசம்

[சி. என். ஏ.]

"ஏழைகள் படும்பாடு உமக்குத் தெரியவில்லையா?"

"தெரிகிறது!"

"தொழிலாளர்களின் துயரால் நாடு நலிவதைத்தாங்கள் உணரவில்லையா?"

"உணருகிறேன்"

"பயங்கரமான பொருளாதார பேதம் சாந்தியையோ சமாதானத்தையோ தராது அல்லவா?"

"தராது. சமருக்குத்தான் வழி உண்டாக்கும்"

"சுரண்டிப் பிழைப்பவன் சுக போகியாகவும், பாடு படுபவன் பகல் பட்டினியாகவும் இருப்பது முறையா?"

"முறை அல்ல!"

"ஒருசிலர், பணத்தைப்போட்டு, பொறிகள் அமைத்து, இயற்கைச் செல்வத்தைப் பாட்டாளியின் உழைப்பால் பெருக்கி, தங்கள் சொந்த இலாபத்தைக் குவித்துக் கொள்கிறார்களே, அது கொடுமையல்லவா?"

"கொடுமைதான்"

"அந்தக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டாமா?"

"கட்டாயம் ஒழிக்கப்படத்தான் வேண்டும்"

"ஆகவே முதலாளித்வ முறை போய்த்தொலைய வேண்டாமா?"

"தொலைய வேண்டும்"

"அப்படியானால் சமதர்ம ஆட்சிக்காகத்தானே முயற்சிக்கவேண்டும்?"

"ஆமாம்!"

"சமதர்ம ஆட்சிசாத்தியப்படும், அது வெறும் கனவல்ல, ஏட்டிலே தீட்டப்பட மட்டுமே ஏற்றஇலட்சியமல்ல, நாட்டிலே நடத்திக்காட்டக்கூடியது, என்ற உண்மையை செயலிலே,தீரமாய்,ஆபத்துக்களைப் பொருட்படுத்தாமல், தன்னந்தனியாக நின்று, எடுத்துக்காட்டிய நாடு எது?"

"ரஷியா"

"உண்மையாகவா?"

"ஆமாம்! இது உலகுக்கு அரிச்சுவடி போலாகிவிட்ட செய்திதானே"

"அப்படியானால், ஏன், அத்தகைய மகத்தான பணியை மானிடகுலத்துக்குச் செய்த மானிலத்தின் மணிவிளக்கு, மங்காப்புகழ்படைத்தசோவியத் ரஷியாவைக்கண்டிக்கிறீர், வெறுக்கிறீர், அதற்குஎதிர்ப் பிரசாரம் செய்கிறீர்?"

"அதுவேறு ஒரு காரணத்துக்காக"

"சமதர்மம் அவசியம் என்பதையும் ஒப்புக்கொள்கிறீர், சமதர்மத்தின் தாயகம் சோவியத் ரஷியா என்றும் ஒப்புக்கொள்கிறீர், இருந்தாலும், அதே ரஷியாவை வெறுத்துப் பேசுகிறீரே, ஏன்?"

"அதுவா? அங்கே ஜனநாயகம் இல்லை',

"சரி! அங்குஜனநாயகம் தேவை என்றால் ரஷியர்கள் கவலை எடுத்துக் கொள்ளட்டும். அதற்காகநீர், அதன்மீது துவேஷப்பிரசாரம்செய்வானேன்?"

"உனக்குத் தெரியாது விஷயம். ரஷியாவின் செல்வாக்குப் பலமாகிக்கொண்டு வருகிறது. ஆதிக்கம் வலுவடைகிறது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலே ரஷியாவுக்குச் செல்வாக்குக் கிடைத்து விட்டது. மத்திய கிழக்கில், சீனாவில், ஏன், நமது இந்திய சாம்ராஜ்யத்திலே கூட, மாஸ்கோவுக்குச்செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது."

"சரி! அதனாலே என்ன ஆபத்து நேரிட்டுவிடும்? என்னகேடு?"

"நமது ஏகாதிபத்யம், சாம்ராஜ்யம், வியாபார ஆதிக்கம், கடலில் ஆதிபத்யம், சர்வதேசசபைகளிலே நமக்குள்ள செல்வாக்கு இவைகள் பாழ்படாவோ! நமது ஏகாதிபத்யத்தை நாசம் செய்யக்கூடிய விஷக்காற்று மாஸ்கோவிலிருந்து கிளம்புகிறது. அது பரவாதபடி தடுத்தாலொழிய நமது ஏகாதிபத்யம்கெடும்"

"ஏகாதிபத்யபாதுகாப்புக்காகத் தானா,இந்தச்சோவியத் எதிர்ப்பு?"

"சந்தேகம் என்ன! நான், நமது ஏகாதிபத்யத்தைக் கலைத்து விடுவதற்காகவா, பிரிட்டிஷ் பிரதமரானேன்!"

"ஏகாதிபத்யத்தைக் காப்பாற்றுவதற்காக, ஏழைகள் வாழவும் வழி உண்டு என்ற உண்மையை உலகிலே நிலைபெறச்செய்த சோவியத் மீது பகையை மூட்டிவிடுவது தர்மமா?"

"ஏழைகளைக் காப்பாற்றும் வழி நமக்கும் தெரியும். அதற்கு நமக்கு மாஸ்கோ பாடம் கற்றுக்கொடுக்கத் தேவையில்லை. ரஷியத்திட்டம் ரஷியாவுக்கு. இங்கு நாமே திட்டம் தயாரித்துக்கொள்ளமுடியும், இங்குள்ள நிலைமை, தன்மை, தேவை, அறிவு, ஆற்றல், இவைகளுக்குத் தக்கபடி."

கேள்வி, பதில் வடிவிலே உள்ள, இந்தத்தத்துவம், சர்ச்சிலிசம், அதாவது, முதலாளித்வமுறைக்கு, முலாம்பூசி, அதைக் காப்பாற்றுவதற்கு, பொதுமக்களிடையே, பிரசாரத்தைத் தந்திரமாகப் புரிந்து, முதலாளித்வத்தைச் சுக்குநூறாக்கிய சம்மட்டி அடியினின்றும், சீமான்கள் தப்பித்துக் கொள்வதற்குவழி கண்டுபிடித்து, அந்தச்சம்மட்டியைத் தயாரித்த சோவியத் ரஷியாமீதே பழிபல சுமத்தி, எந்தப்பாட்டாளி மக்களின் போற்றுதலைப் பெறவேண்டுமோ, அதே பாட்டாளிகளைக் கொண்டே அதே சோவியத்துக்கு எதிர்ப் புணர்ச்சியைஉண்டாக்கும்வித்தை,இந்தச் சர்ச்சிலிசம்!

இதுபிரிட்டனிலே முன்னாள்முதலமைச்சராக இருந்த சர்ச்சிலால் துவக்கப்பட்டு, இந்நாள்வரை அவரால் வளர்க்கப்பட்டு வருகிறது. அவரேகூட எதிர்பார்த்திருக்கமாட்டார், இதற்கு, இந்தியபூபாகத்திலே ஒருகிளைஸ்தாபனம் ஏற்படும் என்று. ஆனால் சர்ச்சிலிசம் இதுபோது இங்கு மிகத் திறமையாக வளர்க்கப்பட்டு வருகிறது. அதலசுதலபாதாளம்என்றுலோகங்கள் பலஉண்டு என்ற அளவிலே, தங்கள் "பூகோள ஞானத்தை" வரையறுத்துக்கொண்டிருந்த 'அன்பர்கள்' கூட இன்று ரஷியாவின் ஆதிக்க வெறிபற்றியும், ராஜதந்திர வெற்றிபற்றியும் பேசுகிறார்கள். பொதுஉடைமை என்றதத்துவமே கூடக்கேலிக்குரிய விஷயமாக்கப்பட்டு வருகிறது. "தோழர்கள்" என்ற சொல்லே, ஏளனக்குறியாக்கப்பட்டு வருகிறது. ரஷியாவின் ஏகாதிபத்யம், பரவாதபடிசெய்யும் "புனிதப்போருக்குத்" தங்களையும், தங்கள் ஆற்றல் (?) திறமை (?) ஆகியவற்றையும் அர்ப்பணிக்க முன்வந்துள்ளனர், இந்நாட்டுக் காங்கிரஸ் அன்பர்கள் பலர். சர்ச்சிலுக்கு இப்படிச் சீடகோடிகள் பெருகிவருவதுபேரானந்தம் தரும்! சர்ச்சிலிசம் பரவுகிறது!

சர்ச்சிலிசம், வேதனையில் பிறந்த குழந்தை. பிரிட்டிஷ் ஆதிக்கம், பல்வேறு நாடுகளிலேயும் எதிர்க்கப்பட்டு, ஏகாதிபத்யம் ஏளனச்சித்திரமாக்கப்பட்ட பிறகு, சோவியத் மணம், பெர்லின், பாரீஸ், வார்சா, மாட்ரிட், ரோம், லண்டன்முதலிய பல்வேறு தலைநகர்களிலும் கமழத் தொடங்கிய பிறகு, சர்ச்சிலிசம் பிறந்தது, ஏகாதிபத்யத்தின்தத்துப் பிள்ளைகளான, ஆலை அரசர்கள்,மில் மன்னர்கள், சுரங்கச் சீமான்கள், எண்ணெய் அரசர்கள், ஆகிய முதலாளிமார்களின், ஆதிக்கத்தின் சாவுச்சந்தமாக. அது, மக்கள் கீதமல்ல! ஆனால் இங்கு, மக்களின் மதிப்புக்குரியவர்கள் என்ற 'மான்யம்' பெற்றுள்ளவர்கள், சர்ச்சிலிசத்தை, இராக—பாவ— தாளம் கெடாதபடி பாடி இன்புறுகிறார்கள். ஏன்? ஏகாதிபத்ய தத்துப் பிள்ளைகளின் தம்பிமார்கள்ஏராளம் வடநாட்டில்; அவர்களின் "ஆண் மனைக் குழந்தைகளுக்கு" வேறு ஆலாபனம் பிடிக்கக் காரணம் இல்லையல்லவா!

மாஸ்கோ ரேடியோவில், டில்லியில் நடைபெறும் பிரிட்டிஷ்மந்திரிமார்களின் மந்திராலோசனை, "வேறொன்றுமில்லை, பிரிட்டிஷ் முதலாளிகளும் இந்தியமுதலாளிகளும் கூடி, உலகிலே குமுறிவரும் புரட்சிச்சக்தியை, குறிப்பாகச் சோவியத் சக்தியை ஒழிக்க ஏற்பாடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் உறவுப்பேச்சுத்தான்" என்றுகூறப்பட்டதாம்.

"சுத்த அபாண்டம்! மோசமான புளுகு, இந்திய முதலாளிகளுக்கும் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கும் ஒப்பந்தமும் இல்லை,தொடர்பும் இல்லை" என்று தேசியப்பத்திரிகைகள் தீப்பொறி பறக்கத்தான் எழுதுகின்றன; ஆனால் பாபம்! அதே இதழ்களில் வேறோர் பக்கத்தில்

வந்து பாருங்கள்!
வசீகரமான புதிய மோட்டார்கள்
வந்துவிட்டன! வந்துவிட்டன!
இந்துஸ்தான்!
10!

என்ற விளம்பரங்கள், பிர்லா கம்பெனியாருடையது. அழகாகப்பிரசுரிக்கப்பட்டுள்ளன. கோடீஸ்வரர் பிர்லாவுக்கும் வெள்ளை முதலாளி நப்பீல்டு பிரபுவுக்கும், மோட்டார் தொழில் பாக ஒப்பந்தம் நடந்திருக்கிறது. விளம்பரங்கள், மாஸ்கோவின் வாக்குப்பொய்யல்லஎன்பதைவிளக்கமாகக்காட்டுகின்றன.

காந்தியார், சர்ச்சிலிசத்தைக் கடைப்பிடிக்கவில்லை. சர்ச்சில், சமதர்மம் எனக்குத்தெரியும், ரஷியா கற்றுக்கொடுக்கத் தேவை இல்லை என்றுகூறுகிறார். காந்தியாரோ, பச்சையாக நெடுநாட்களுக்குமுன்பே சொல்லிவிட்டார், "நான் ரஷியா நடத்திய புரட்சி சம்பந்தமான புத்தகங்களைப் படிக்கவில்லை" என்று. ஆகவே அவர், எப்போதும்போல, "இராமராஜ்யம்" வரவேண்டும் என்று கூறுகிறார். மற்றவர்கள், மாஸ்கோவைப் பாராட்டிப் பேசி, லண்டனின் ஆதிக்கத்தைக்கண்டிப்பர். பல்லவி சமதர்மம், அநுபல்லவி, அந்தப்பிரிட்டிஷ் ஏகாதிபத்யம்கெடுப்பது, சரணம் சுயராஜ்யத்தின் அவசியத்தைப்பற்றி, இப்படியே இருந்தது, காங்கிரஸ் கீர்த்தனம்! சந்தேகமிருப்பவர்கள்,பண்டிதஜவஹர், பெய்ஸ்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலே ஆற்றிய தலைமை உரையைப்பாருங்கள்,பண்டிதர் மாஸ்கோவுக்கு எவ்வளவு அருகிலே போகிறார் என்பது விளங்கும். இன்று காங்கிரஸ் கீர்த்தனமே மாறிவிட்டது. ரஷியாவின் ஆதிக்க ஆசை! அதற்கு நாங்கள் சம்மதிக்க மாட்டோம்! ரஷிய சமதர்மமும் எமக்கு வேண்டாம். நாங்கள் சுதேசி சரக்குத்தயாரித்துக் கொள்வோம்,என்கின்றனர். சரக்கு இந்துஸ்தான் மோட்டார் நம்பர் பத்து, போன்ற முறையிலே இருக்கக்கூடும். நாட்டுவிடுதலையில் நாட்டம்கொண்டநண்பர்களே, இப்படி சர்ச்சிலிசத்துக்கு இரையாவது, சரிதானா என்று கொஞ்சம் ஆர அமர இருந்து யோசியுங்கள்.

கம்யூனிஸ்டு கட்சிமீது வந்த கோபம், கடைசியில், சர்ச்சிலிசத்துக்குச் சீடர்களாகும்நிலைமைக்கு கொண்டுபோய்விட வேண்டும்! இது,ஜின்னாமீதுஉண்டாகும்கோபம், காங்கிரசை, சுதேச சமஸ்தான லீலாவினோதர்களின்சினேகத்தைக் கூட நல்லது என்று எண்ணச் செய்துவிட்டதே, அதுபோல அல்லவா இருக்கிறது, ஏன் இந்த விபரீதப்போக்கு?

சோவியத் ஆதிக்கம் பரவுகிறது என்பதை இல்லை என்று மறுக்கவில்லை. மறுக்கமுடியாது. மறுப்பானேன்! ரஷியா, அதிக தூரத்திலும் இல்லை. எல்லைப்புறமாகாணம், அதைத் தாண்டினால் ஆப்கனிஸ்தான், அதை அடுத்தால்; ஈரான், அதை ஒட்டி சோவியத்! மிக அருகாமையில்தான் ரஷியா இருக்கிறது. உண்மைதான். இருந்தால் என்ன? ஆதிக்கம்வலுத்தால்என்ன? கிலிகொள்ளவேண்டியவர்கள் யார்? மக்களா, அல்லது மக்களைக் கசக்கிப்பிழியும் முதலாளித்துவமா? யோசித்துப்பார்! மாளிகையிலே உலவும் மந்தகாச உருவங்கள், மருள வேண்டியது முறைதான். உனக்கு என்னப்பா கவலை? உலுத்தர் வாழ்வுக்காகவே உன் உழைப்பைத்தந்து உருமாறுபவனே, நீ ஏன், உன் சக்தியைத்தற்கொலைக்குப்பயன்படுத்திக்கொள்கிறாய்.

ரஷியாவின் ஆணவம், ஆதிக்க வெறி, ஆசை ஆகியவைகளைக் கண்டித்து, எல்லைப்புற மாகாண M. L. A. ஒருவர் சென்றவார இந்த இதழிலே ஒருகட்டுரை தீட்டியிருக்கிறார். என்ன சொல்கிறார், இந்த சர்ச்சிலிசச்சீடர்?

"ரஷியாவின் ஆதிக்கம் இந்தியாவிலேபரவாதபடிதடுக்க,எல்லைப்புறமாகாணம் பணிபுரியும். எல்லைப்புற மாகாண வழிதான், எதிரியின் படைஎடுப்புக்கு ஏற்றது. ஆகவே எல்லைப்புறம் பாதுகாப்பானதாக, பலமானதாக இருக்கவேண்டும்" என்று கூறுகிறார். நல்லமனிதர். சோவியத்தினால் ஆபத்து வரும்

அடுத்த பக்கம் பார்க்க


ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் ✣ கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன சௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.

# வெளிவந்துவிட்டது!

பேகம் ஜின்னாஹ்வின் அழகிய படத்துடன், காயிதே அஃலம் அவர்களின் கல்யாண வரலாறு வெளிவந்துவிட்டது.

100 பிரதிகள் ரூபாய் 10. முன்பணம் அனுப்பவேண்டும்.

A. M. யூசுப்மரைக்காயர்,
ஹாரூன் பதிப்பகம்,
16—33, இமாம்பாடாலேன் கோயமுத்தூர்.

N. B. :— மற்ற பிரதிகள் விரைவில் வெளி வரும்.


## சர்ச்சிலிசம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

என்று இங்கு எண்ணம் இருப்பதைக்கவனித்தார்; தனக்குச்சோவியத் ஆதிக்கம் பிடிக்காது என்பதைக்காட்டிக்கொண்டார், பிறகு? அங்கேதான் அவர், வேடிக்கையான மனிதராகிறார்!

சோவியத் ஆணவமும் ஆதிக்க வெறியுங்கொண்டதாம்! அவர்கூறுவது. அதனைஇந்தியாவுக்குள் வரவிடாதபடிதடுக்கும் நிலைபெற்றஇடம் எல்லைப்புறமாகாணம். அந்தஎல்லைப்புறமாகாணத்தின் நிலைமை என்ன?

“பொருளாதாரத்துறை, கல்வித்துறை ஆகியவற்றிலே நீங்கள் அடைந்திருக்கிற அளவு முன்னேற்றம் எங்களுக்கு வேண்டும். படிக்கும் வசதியற்ற பட்டாளியன் படித்த பண்டிதனுடன் எப்படி நேசமாகமுடியும்? யந்திரத்தொழில் துறையிலே நன்றாக முன்னேறிய இந்தியாவிலே, தொழில் துறையிலே முன்னேற்றமே அடையாத எல்லைப்புற மாகாணம் எப்படி ஒரு அங்கமாக இருக்கும்!

எங்கள் மாகாணத்திலே படிப்பு மிக மிகக் குறைவு. எங்களுக்கு பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகம், தொழிற்கல்லூரி, மாதர் கல்வி போதகர்கள், ஆஸ்பத்திரிகள் எல்லாம் வேண்டும். எவ்வளவோ தொழில்கள் உற்பத்திசெய்யவழி உண்டு, ஒன்றுகூட உண்டாக்கப்படவில்லை. மலைகளிலே உலோகங்கள் உள்ளன. வெட்டி எடுக்கப் பணம் இல்லை. எந்தத்துறையிலே பார்த்தாலும் நாங்கள் மிகப்பின்னணியில் இருக்கிறோம். கதை இருக்கிறது ஏராளமாக, நாங்கள் முன்னே கியாதியுடன் வாழ்ந்தோம் என்றுகூற. பழங்கதை பேசிப்பயன் என்ன? இப்போது நாங்கள், மிகப்பின்னணியில் இருக்கிறோம்”

இது எல்லைப்புற மாகாணம் கான் அப்துல்கனிகான் M. L. A. தீட்டும் சித்திரம். படிப்பு இல்லை! தொழில் இல்லை! முன்னேற்றம் இல்லை! நாகரிக வாழ்வுக்கான வசதி இல்லை; இந்தியாவின் மற்ற இடங்கள் முன்னேறிவிட்டன, முன்னேறுகின்றன, எல்லைமட்டும்தொல்லையை அனுபவித்துக்கொண்டே இருக்கிறது, என்றார்கான் அப்துல்கனிகான்.

இந்த எல்லைப்புறமாகாணத்தின் பலத்தைக்கொண்டுதான் ரஷியப் படை எடுப்பு நேரிட்டால், தடுக்க வேண்டும்என்கின்றனர். மகத்தான காரியத்தைச் செய்ய வேண்டிய பொறுப்பு எந்த மாகாணத்தின்மீது ஏற்றப்படுகிறதோ, அந்த எல்லைப்புறமோ, கல்வி தொழில் முதலிய எல்லாத்துறையிலும் பலம் குன்றிக் கிடக்கிறது!!

என்று அவரே கூறுகிறார். கூறிவிட்டு, என்ன கேட்கிறார்? கொஞ்சம் கடன் கேட்கிறார், எல்லைப்புற மாகாணத்தைச் சீராக்க, பலப்படுத்த, எதிர்த்தாக்குதல்ஏற்படின் தாக்க. எவ்வளவு பணம்? ஒரு இருபதுகோடிரூபாய்! ஆசாமி, புத்திசாலிதான்! சந்தேகமா!!

மற்றொன்று சொல்கிறார். சோவியத் ரஷியாவுக்கு ஏராளமான ஐந்தாம்படை இங்கே இருப்பதாக. கம்யூனிஸ்டுகளை, அவர் குறிப்பிடவில்லை.

பசி! ஏழ்மை!! இவை, சோவியத்துக்கு ஐந்தாம்படை என்கிறார். உண்மை! ஆனால் எவ்வளவு பெரிய உண்மை!! பசி! பசி! எங்கெங்கு பட்டினிப் பட்டாளம் இருக்கிறதோ, எங்கெங்கே ஏழையின்கண்ணீர் வழிகிறதோ, எங்கே ‘இல்லாமையின்’ இம்சை இருக்கிறதோ, அங்கே எல்லாம், சோவியத்துக்கு ஐந்தாம்படை உண்டு, என்கிறார் எல்லை M. L. A. உண்மைதானே! இந்த நிலையில் இவர் கேட்கும் 20 கோடி கடனைக் கொடுத்துத்தான் என்ன பயன்?

பட்டினிக் கொடுஞ் சிறையில் பதறுகின்ற மனிதர்களிடமா, மாஸ்கோவின் ஏகாதிபத்தியம், ரஷிய ஆதிக்க ஆசை என்ற சர்ச்சிலிசத்தைப்பேசுவது? பலிக்குமா? நம்புவார்? நியாயந்தானா?

சிந்தித்துப் பாருங்கள், நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டவர்களில் ஏராளமானவர்கள், தங்களையும் அறியாமல் சர்ச்சிலிசத்துக்குப் பலியாகிறார்களே, இதுசரியா என்று!

## காஞ்சிபுரம் திராவிடர் கழகம்

14-4-46 ஞாயிற்றுக்கிழமை திராவிடர்கழகநிர்வாகக்குழுக்கூட்டத்தில், வருகிற ஜூன்மாதத்தில் செங்கற்பட்டுஜில்லா திராவிடர் கழக மாநாட்டையும், சுயமரியாதை மாநாட்டையும் காஞ்சிபுரத்தில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## பேரறிஞர் சாக்ரடீஸ்

8-ம் பக்கத் தொடர்ச்சி

யற்ற மன்றத்தினரிடத்தே எதைக் கூறினால்தான் என்ன பயன் என்பதை உணர்ந்த சாக்ரடீஸ், வழக்கினை வாதிட விரும்பவில்லை. ஆகவே சாக்ரடீஸ் அறங்கூறவையத்தாரைப்பார்த்து “என்னை விடுவியுங்கள் அல்லது விடுவிக்காமல் இருங்கள். அது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால்ஒன்றைமட்டும் உணருங்கள். நான் இப்பொழுது எதைச் செய்து வருகிறேனோ அதைத்தான்இனிமேலும்செய்வேன். நான் இறக்கவேண்டி நேரிட்டால் என்னைப்பல இறப்புக்கள் தொடரும்!” என்று கூறிமுடித்தார். மன்றத்தாரின் மனப்பான்மைக் கேற்றவாறு ‘செய்யும் முடிவே தீர்ப்பு என்றிருக்கும் நிலையில் நீதிகோரிப் பயன் ஏற்படாது என்பதை நன்கு உணர்ந்தார் சாக்ரடீஸ். வழக்கினை ஆய்ந்து பாராமல் மெலிடஸின் தீர்ப்பை வைத்துக்கொண்டு அதற்குமுடிவு கூற மன்றத்தினரின் வாக்குகள் எடுக்கப்பட்டன. சிறிதளவு மிகப்பட்ட பெரும்பான்மையான வாக்குறுதிகளால் சாக்ரடீஸுக்குக் கொடுக்கப்பட்ட வேண்டிய தண்டனை சாவு என்று முடிவு செய்யப்பட்டது. பேரறிஞர் சாக்ரடீஸ் இனி வாழக்கூடாது, நஞ்சு ஊட்டிக் கொல்லப்பட வேண்டும், இது தான் தண்டனை! ஆம்! கொடுந் தண்டனை! நாட்டிற்குழைத்த நாயகனுக்குத்தான்தண்டனை! கிரீக்கிய நாடு சாக்ரட்டீஸுக்குக் கொடுத்த இறுதிப்பரிசு ஒருகோப்பை நஞ்சு! இத்தகைய பரிசை கொடுக்கச் செய்த ‘நீதி’ மன்றத்தார்க்கு அறிவுலகம் கொடுக்கும் பரிசு அழியா நிந்தனை! அறங்கூற வையத்தில் அன்று மறம் நின்று நிலவியது. இதற்கு முன்னால் குற்றம்சாட்டப்பட்ட மக்கள் கண்களில்நீர் வழிய மன்றத்தாரைக் கொஞ்சும் மொழிகளால் கெஞ்சிக் கேட்டுக்கொண்டால்தண்டனையினின்றும்அவர்களை விடுவிப்பது அக்கால அந்நாட்டுப் பொது நீதியாக இருந்துவந்தது. இதனைச் செய்ய சாக்ரடீஸுக்கு மனமில்லை; மனமில்லை என்பது மட்டுமல்ல, செய்யவும் மறுத்தார். ஆகவே அஞ்சா நெஞ்சனுக்குத் தண்டனை அளித்தது அறங்கூற வையம்.

தண்டனை எதிர்பார்க்கப்பட்டது. எனவே சாக்ரடீஸ் மனங் கலங்கவில்லை. அதற்கு மாறாகமகிழ்ச்சிகொண்டார். காரணம்கடமைக்காக இறப்பை ஏற்கிறோம் என்பதாகும். இட்ட தண்டனையை ஏற்றுக்கொள்ள இசைந்தார். ஏனெனில் அரசியல் முறை தன் கருத்துக்கு மாறுபட்டு விளங்கினாலும் அதற்கு எப்பொழுதுமே அடங்கி நடப்பது அவரது பண்பு. நீதி மன்றத்தாரைப் பார்த்து அவர் இறுதியாகக்கூறியது. “நீங்களும்நானும் பிரிவதற்குரிய காலம் இது. நீங்கள் இருக்கப்பிரிகிறீர்கள்; நான்இறக்க பிரிகிறேன். இருவரில் யார் நல்லதைச்செய்யப்பிரிகிறோம்என்பதைக் காலம் உணரும்.” என்பதாகும். பிறகு அங்கிருந்து அவர் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

விரிகதிர் செஞ்ஞாயிறு செக்கர் உமிழும் செவ்வானில்சென்றுமறையும் அந்திநேரம் வந்தது. குளித்துவிட்டு வெளியேவந்த சாக்ரடீஸ் காற்றுவீசும் புழையின்அருகேஉட்கார்ந்தார்; சிறைக்காவலாளி அங்கு வந்தான். கட்டுக்குலையாத உடலமைப்போடுவிரிந்தமுகம்மலர, பரந்த கண்கள்ஒளிர, வெண்தாடி அசைய வீற்றிருந்த சாக்ரடீஸைக்கண்டான்; தன்னையறியாது சில சொன்னான். “பேரறிஞரே! எத்தனையோ பேருக்குஎன்கையால்நஞ்சுகொடுத்தேன்: நஞ்சினைவற்புறுத்தி ஊட்டும் போதெல்லாம் அவர்கள் என்மீது சீறிவிழுந்தார்கள்; வசைச்சொற்களை வீசிஎறிந்தார்கள். அவர்களைக் கொல்ல முடிவுசெய்ததுநான்என்று எண்ணினார்களேயொழிய, நீதிமன்றத்தார்என்றுஎண்ணவில்லை. ஆனால் தாங்களோ இத்தனைநாள் அன்புமொழிகளைக்கூறி என்னோடு பழகி வந்திருக்கிறீர்கள். ஒரு குற்றமும் செய்யாத தங்களுக்கு எப்படிநான் நஞ்சினைக்கொடுப்பேன், எங்ஙனம் நான்பிரிவுமொழி கூறுவேன்” என்று கூறி ஆற்றாது அழுது நீர்ததும்பும் கண்களோடு அவ்விடத்தில் நிற்க மாட்டாமல் அகன்றான். “கிரைட்டோ, நீ சென்று நஞ்சு வார்க்கப்பட்ட கோப்பையை எடுத்துக்கொண்டுவா!” என்றுகூறினார். நஞ்சுக்கோப்பையும் கொண்டுவரப்பட்டது. நகை முகத்தோடு நடுங்காத கைகளில் ஏந்திக்கடமையைச் செய்கிறோம் என்ற களிப்பினால் அட்டியின்றி அருந்தினார்.

அறிவியலுக்குப்புதியவழிகோலிய அறிஞர் ஆணவ எண்ணங்கொண்டோரால் கடுநஞ்சு ஊட்டப்பட்டுப் போக்கடிக்கப்பட்டார். சாக்ரடீசை இழந்த ஏதென்ஸ்ஏக்கமுற்றது, பின்னால் அத்தகைய அறிஞரைக்காணமாட்டாமல். புலவர்களையும், பேராசிரியர்களையும், தத்துவாசிரியர்களையும், வரலாற்றாசிரியர்களையும்கிரீக்கியநாடுகண்டதுபோல மற்ற நாடுகளும் காணமுடிந்தது. ஆனால் வேறோர்சாக்ரடீசைக் கிரீக்கியநாடே காணமுடியவில்லை. பேரறிஞர்சாக்ரடீஸ் இருந்துவிட்டுச் சென்ற இடத்தைநிறைத்துப்பொலிவாக்கிக் காட்டியவர் எவருமே இதுகாறும் இப்பரந்துபட்ட உலகில் ஏற்படவில்லை. கடமையைச் செய்து கல்லறைபுகுந்த சாக்ரடீஸ், இளைஞர் உலகுக்குத் தந்தபரிசு “நீயே அறி” (Know thyself) என்பதாகும்.

## சொன்னோம்!

3-ம் பக்கத் தொடர்ச்சி

தன்பேரில் தப்பிதம் இருந்தால், அதைத்தெரிந்துகொள்ள, யோசனைத்திறனும் அறிவும்வேண்டும்; உணர்ந்த தவறைஒப்புக்கொள்ளத் தைரியம்வேண்டும், அசட்டுக் கௌரவம், கண்ணை மூடிவிட்டால், உண்மைஎவ்வாறுபுலப்படும்? தப்பிதம் செய்வது இயற்கைதான். மகா மேதாவிகள்கூடத் தவறுசெய்திருக்கிறார்கள். ஆனால் பொய்க்கௌரவத்தைத் தாங்கி நின்று அவர்கள் உண்மையை உணராமல் இருப்பதில்லை. உண்மை என்று கண்டதை, அமுலுக்குக்கொண்டுவர, அவர்கள் தயங்குவதில்லை.

ஹிந்துக்கள் அழியாமல் இருக்கவேண்டுமானால் அவர்கள் அந்நியர்களின் பேரில் பழியைப் போட்டுவிட்டு, இனியும் வாழ்தல்கூடாது. இந்த உலகத்துக்குத்தேவையானவைகளை தங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளவேண்டும். மண்ணில் வாழ்க்கை சாரமில்லாதது என்று பிதற்றிக்கொண்டு, வாழ்க்கைத் தத்துவத்தையும் திட்டத்தையும் மாற்றிக்கொள்ளாமல் இருந்தால், ஹிந்துக்கள் சாசுவத அடிமைகளாகத்தான் வாழ முடியும். அதைப்பற்றியாரும் சந்தேகப்படவேண்டாம். எய்க்கிற வித்தை தொலையவேண்டும்.”

இன்னமும் என்ன வேண்டும்? நாம் சொல்வோம், அவர்கள் ஒருநாள்இல்லாவிட்டால் மற்றோர் நாள் அதை ஒப்புக்கொள்வார்கள்; சொல்லித் தீருவார்கள். நமது கொள்கைகள், திட்டங்கள் அவ்வளவு உயர்ந்தவை. எதிர்ப்பதாகக் கூறுபவரே, ஏற்றுக்கொண்டு தீரவேண்டும்.

ஆகவே, சொன்னோம்! சொல்கிறார்கள்! சொல்கிறோம்! சொல்லுவார்கள்!! என்று உறுதிகொண்டு பணிபுரியுங்கள், வீண் போகாது.

எனவே, உறுதியுடன்நம்பிக்கையுடன், சொல்கிறோம் “திராவிட நாடு திராவிடர்க்கே” என்று.

திராவிடர் அனைவரும், அந்த முழக்கத்தைச் சொல்லும் காலம் அதிக தூரத்தில் இல்லை!!

## காலமானார்

ரைட் ஆனரபிள்வலங்கைமான் சீனுவாச சாஸ்திரியார் அவர்கள்17–4–46ல் சென்னையிலுள்ள தமதில்லத்தில் காலமானார். அவருக்கு வயதுஎழுபத்தாறு.


## WANTED

Applications are invited from qualified candidates for the post of Manual Training Instructor (Rattan Work) in the Board High School at Ponneri in Rs. 30–2B–50. grade. Applications furnishing age, qualifications (General and Technical,) community and previous experience should reach this Office on or before 1–5–1946.

Chingleput Dt. Board's Office,
Saidapet, Dated 8–4–1946.

T. Shunmugam,
President.

# இராம இராச்சியம் எப்படி வந்தது?

(கைவல்யம்)

இராமாயணம் என்றசொல்லைக் கேட்டவுடனே நம்மவர்களுக்கெல்லாம் பக்தியும் நீதிபும் வந்துவிடுகிறது. அதிலும் மகாத்மா காந்தி அவர்களே இராமஇராஜ்யமென்று சொல்லுகையில் அதில்விசேடமில்லாமலாபோகும் என்றுபலர்நினைக்கலாம். மகாத்மாகாந்தி அவர்களும் இராமாயணம்படித்துத்தான் இராம இராஜ்யம் தெரிந்தார்; நீங்களும் இராமாயணம்படித்திருக்கிறீர்கள், இராமாயணத்தைப் படித்து அதிலுள்ளவைகளை எல்லாம் அப்படியே தெரிந்த நம்முடைய பெரிய இராமாயணப்பண்டிதர்களும் இருக்கிறார்கள். நானும் இராமாயணம் படித்திருக்கிறேன். இராமாயணம் உண்டானதற்குள்ள காரணமும், அதன் கர்த்தாக்களின் வரலாறுகளும், அதனால் உண்டான இராமஇராஜ்யத்தையும் சொல்லுகிறேன். சாவகாசமாகப்படியுங்கள், படித்தபின் ஆலோசியுங்கள், படித்தவர்களுமிருக்கிறார்கள், சிந்தனைசக்தியுடையவர்களும் இருக்கிறார்கள், உண்மைக்குப் பரிந்துபேசுகிறவர்களும் வந்துகொண்டே இருப்பார்கள்.

பலஇராமாயணங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் முதல் இராமாயணம் வால்மீகம் என்கிறார்கள். புராணக்கற்பனைப்படி இராமாயணம் நடந்தகாலம் சொல்ல வேண்டுமானால் கைலாயம், வைகுண்டம், இந்திரலோகம், பிரம்மலோகம் ஆகியவைகளில் அரசாட்சி செய்த சிவன், விஷ்ணு, பிரம்மா முதலியவர்களின் கொடிவேலிப்பட்டிகைகளும் தெரியவேண்டும். காலம் சொல்லுவது, பண்டிதர் சேதுப்பிள்ளைபோன்ற ஆராய்ச்சிப்பண்டிதர்களுக்குத்தான் அதுசாத்தியம். நமக்கு அதுசாத்தியமில்லை. கிரேதாயுகத்தில் நடந்ததாகச் சொல்லுகிறார்கள். அந்தயுகக் கணக்குப்படி பார்த்தால் பலஇலட்ச வருடங்களாகின்றன. இராட்சதர்களின்உபத்திரவத்தால்தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட்டார்கள் 'நான் இராமராக அவதாரம்செய்து இராட்சதர்களைச் சம்மாரம் செய்கிறேன்,' என்று விஷ்ணு சொன்னார். அப்படியே அவதாரஞ்செய்து தேவர்களின் குறையைத்தீர்த்தார் என்று புராணிகர்கள் சொல்லுகிறார்கள். அதற்குமேலும் விஷ்ணு இராமராக அவதாரம்பண்ணுவதற்குச் சைவ, வைணவமுக்கிய புராணங்களிலிருந்து காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தப்புராணங்களைச் சைவ, வைணவர்களோ, அதனதன் பண்டிதர்களோ தள்ளக்கூடாதவை; அந்தக் காரணங்கள் ஆபாசமானவை, அறிவிற்குப்புறம்பானவை. அதுமட்டுமல்ல. மானம், மரியாதையைவிரும்பும் சமயவாதிகள் வெளியில்சொல்லக்கூடாதவை, வெளியில் சொன்னால் ஆஸ்திகர்கள் வெட்கப்படக்கூடியவை. நம்முடைய முதன்மையான தெய்வங்களின் குணம், ஒழுக்கம், செய்கை முதலியவைகளைக் கேவலத்திலும் கேவலமாக எழுதப்பட்டிருக்கிறது. அதில்முக்கியமானதைக்கீழே எழுதுகிறேன். நம்முடைய தெய்வங்களையும், ரிஷிகளையும் தெரிந்து கொள்ளுங்கள். அதைச்சொல்லுகிற பண்டிதர்களையும் பாருங்கள்.

விஷ்ணுவும் இலட்சுமியும் வைகுண்ட அரண்மனையின் வாயிலுக்கு விஜயன், ஜெயன் என்கிற காவற்காரர்களைக் காவல்வைத்து, யார் வந்தாலும் உள்ளே விடாதீர்கள் என்றுஉத்தரவிட்டு அரண்மனையின் அந்தப்புரப் பள்ளியறைக்குக் காமலீலைசெய்து களிக்கப்போனார்கள். அப்பொழுது பிரம்மாவின் புத்திரர்களான சனகாதி மகாரிஷிகள் உள்ளேபோனார்கள். காவற்காரர்கள்தடுத்தார்கள். உடனே காவற்காரர்களை "நீங்கள் இராட்சதர்களாகப் போகக்கடவது என்று ரிஷிகள் சாபம்கொடுத்தார்கள். இந்தச்சத்தம்கேட்டுவிஷ்ணுவந்தார், ரிஷிகளை வணங்கினர். காவற்காரர்களால் சங்கதி தெரிந்தார் "பிராமண உத்தமர்களால் கொடுக்கப்பட்ட சாபத்தை யாராயிருந்தாலும் அனுபவித்தே தீரவேண்டும். என்னால் கூட அதைமாற்றமுடியாது. ஆனதால் நீங்கள் இராட்சதர்களாகப் பிறவுங்கள். நான் இராம அவதாரம் எடுத்து உங்களைச் சம்மாரஞ்செய்து இங்கே அழைத்துக்கொள்கிறேன்" என்றார் விஷ்ணு. இந்தக்கதையின் ஒழுங்கு முறையைப் பார்த்தீர்களா? காவற்காரர்கள் ரிஷிகளை உள்ளேவிட்டு ரிஷிகள் உள்ளே போய் விஷ்ணு இலட்சுமி செய்யும் லீலா விநோதங்களைக் கண்டு மோகித்து இலட்சுமியை ரிஷிகள் கட்டிப்பிடித்து, விஷ்ணு அதைக் கண்டுதடுக்க, ரிஷிகள் சாபம் கொடுக்க, அப்பொழுதும் காவற்காரர்களுக்குச்சொன்ன நியாயத்தைத்தான் விஷ்ணு தனக்கும் சொல்லியிருக்க வேண்டும். பிராமணர்களை எதிலும் தடுக்கயாருக்கும் நியாயமில்லை. சாபம் கொடுத்தால் அதை நீக்கத் தனக்கே சக்தியில்லை என்று விஷ்ணுவே சொல்லிவிட்டார். பள்ளியறைக்குள் ரிஷிகள்போய் விஷ்ணுவுக்கும் லட்சுமிக்கும் மத்தியில் படுத்து, விஷ்ணுதடுத்து, ரிஷிகள் சாபம் கொடுத்து அதற்குமேல் என்ன நடக்குமோ கதையை? எழுதினவர்கள் அவ்வளவுதூரம் புராணத்தைக் கொண்டுபோகவில்லை. அது அவர்களுக்கு அவசியமில்லை பிராமணர்களை எதிலும்யாரும் தடுக்கக் கூடாது, அவர்கள் கொடுக்கும் சாபத்தை விஷ்ணுவால் கூடத் தடுக்க முடியாது என்பதுவரையிலும்தான் புராணம் எழுதினவர்களுக்கு வேண்டும். அதுவரையிலும் ஜன சமுகத்துக்குத் தெரியப்படுத்தித்தெரிந்து கொண்டால்போதும். தெரிந்துகொள்ளவும், தெரியப்படுத்தவும் விஷ்ணுவைப்பூலோகத்துக்கு இராமராகக் கொண்டு வந்தும் ஆயிற்று. இராமாயணம் உண்டானதற்கு இந்தக்கதைதான் முதற்காரணம். அங்கிருந்துதான் இராமாயணம் உற்பத்தியாகிறது. அதற்காகவே அதுஎழுதப்பட்டது. இந்தக்கதை விஷ்ணுபுராணத்தில் உள்ளது. இதுவைணவர்களுக்கு முக்கிய சமயநூல்.

விருத்திராசூரன் என்கிற அதிபலவானான ஒருஇராட்சதன் இருந்தான். பிருதை என்கிற அவன்மனைவி மகா அழகும் சிறந்த கற்பும் உடையவள். அவளைக்கண்டு விஷ்ணு ஆசைப்பட்டான். பலதடவை சூரனிடம் சண்டைபோட்டுத் தோற்றுப்போனர், பிருதை யினுடைய கற்பும் சூரனுடைய பலமும் விஷ்ணுவின் ஆசைக்குத்தடையாக இருந்தன. விஷ்ணு இதைச் சிவபெருமானிடம் சொன்னர். சிவபெருமான் சூரனிடம் சண்டைபோட்டு அவனைக்கொன்றார். விஷ்ணு செத்துப்போனசூரன்உடலில்புகுந்துபிருதையிடம்வந்து அவளுடைய கற்பைக் கெடுத்தார். பின் அதைப்பிருதை தெரிந்தாள் "அடேசண்டாளா விஷ்ணுவே! துரோகி, அநியாயமாய் நீ என்கற்பைக்கெடுத்தாய். அதனால் நீயும் உன் பெண்சாதியும் பூலோகத்தில் மனிதர்களாகப் பிறந்து என் குலத்தவனான இராட்சதன் உன் மனைவியின் கற்பை அழிக்கக் கடவது" என்றுசாபம்கொடுத்து, அக்கினியைமூட்டி அதில்விழுந்துசாம்பலானாள். விஷ்ணு பிருதையின் ஆசையால் அந்தச் சாம்பலில் புரண்டுகொண்டு கிடந்தார். சிவபெருமானின் பெண்சாதிதன் அண்ணன்படும் அவஸ்தையைக்கண்டு தன்பணிப்பெண்களில் துளபம் என்கிற பெண்ணை அனுப்பிச் சோகத்தைத் தீர்க்க வைத்தாள். இதுஎங்கே! எப்பொழுதுநடந்தது! வேதக்கடவுளுக்கும் இராட்சதப் பெண்ணுக்கும் பொருத்தம்சரியா? தேவர்களும் இராட்சதர்களும் பங்காளிகளாயிற்றே? இதன் தத்துவார்த்தம் என்ன? தெய்வங்களின் திருவிளையாடல் அல்லவா? இதெல்லாம் எனக்குத்தெரியாது. ஆங்கிலம் படித்து ஆராய்ச்சியில்தேர்ந்த நமதுபெரிய சைவ வைணவப்பண்டிதர்களுக்குத் தெரியலாம். விஷ்ணுவைத்தாழ்வுபடுத்தச்சைவர்கள் எழுதினகதையாக இருந்தாலும், விஷ்ணுசெய்த அக்ரமத்துக்குச்சிவனும் உடந்தை என்பதும் அந்தக் கதையில் இருக்கிறது. இராமர்உற்பத்திக்கும் இராமாயணம் உண்டானதற்கும் சைவர்கள் சொல்லும் காரணம் இத்தக்கதை. இது சைவபுராணங்களில் முக்கியமான கந்தபுராணத்தில் இருக்கிறது.

பிரம்மா, ரிஷி, முனி என்பவை பெயரில் வித்தியாசமே ஒழிய அர்த்தமும் கருத்தும் பிராமணன் என்பதையே குறிக்கும். நாரதமகரிஷி என்று எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதிகாச புராணங்களை எழுதிவிட்டு அவைகளிலுள்ள ஓட்டை, மேடுபள்ளம், கூட்டல், குறைத்தல் முதலியன சரிப் படுத்திக் காட்ட வேண்டியதற்கு உண்டாக்கப்பட்டவர் நாரதர். தெய்வலோகத்திற்கும் பூலோகத்திற்கும் சஞ்சாரஞ் செய்து தெய்வங்கள், தேவர்கள், இராஜாக்கள் முதலியவர்களுக்கு உலகத்திலுள்ள அழகான பெண்களின் வரலாறுகளைக் கூறுவதும், சமயம் கிடைத்தால் தானும் கலியாணம் செய்து கொள்வதும் அவர் தொழில். அந்த நாரதர் உலகம் சுற்றிவருகையில் ஒரு தேசத்தில் ஒரு இராசாமகளுக்கு சுயம்வரம் நடக்கப்போகிறது, அந்தப் பெண் மகா அழகு என்று தெரிந்தார். அவளைக் கலியாணம் செய்து கொள்ள நினைத்தார். ரிஷியின் அழகு அதற்கு ஏற்றதல்ல என்று உணர்ந்து உடனே மகாவிஷ்ணுவிடம் வந்தார். சங்கதியைச் சொல்லி அவர் அழகைக்கொடு என்று கேட்டார். விஷ்ணு தன் அழகைக்கொடுத்து முகத்தை மட்டும் குரங்குமுகமாகச் செய்துவிட்டார். நாரதரும் விஷ்ணுவும் சுயம்வரத்திற்குப் போனார்கள். குரங்குமுகத்தோடிருந்த நாரதரை அப்பெண்பார்த்துச் சிரித்துவிட்டு அழகாயிருந்த விஷ்ணுவிற்கு மாலை போட்டாள். விஷ்ணு அப்பெண்ணை அழைத்துக்கொண்டு வைகுண்டம் போனர். நாரதர் அதிக கோபமடைந்து விஷ்ணுவிடம் சென்று "நான் ஆசைப்பட்ட பெண்ணை என்னைமோசஞ்செய்துநீகொண்டு வந்து விட்டதால் இந்தவைகுண்டத்தையே துவம்சம்செய்து உன்னையும் நாசம் செய்து விடவேண்டும். அதற்குப் பதிலாக நீயும் உன்மனைவியும் பூமியில் மனிதர்களாகப் பிறந்து உன்மனைவியை அன்னியன் அபகரித்துப் போகட்டும்! நீஎனக்குக்கொடுத்த குரங்குமுகமே உனக்கு உதவி புரியட்டும்" என்று சாபம் கொடுத்தார், இந்தக்கதை பிராமண சாபத்தின் மகிமையைத் தெரியப்படுத்தவே எழுதியது. கதை இருக்கட்டும். அதிலுள்ள குற்றம் தெய்வத்தின் கடாட்சத்தின் பேரிலும், ரிஷிகள் தவசின்பேரிலும் நின்றுவிடும், மிஞ்சிநிற்பது பிராமணசாபம்தானே! அதைத்தானே சூத்திரர்களுக்குப் பண்டித சாஸ்திரிகள் உபதேசம் செய்ய வேண்டும்! இராமாயணத்திற்கும் இராம அவதாரத்திற்கும் இந்தக் கதையே ஆதிகாரணம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய கதைகளை ஆதாரமாகவுடைய இராமாயணமும், இராமஇராச்சியமும் எத்தன்மையுடையதாயிருக்க வேண்டும்? எதற்காக எழுதப்பட்டது? என்பதை ஆலோசித்துப் பாருங்கள். புராணங்களை எல்லாம் நாங்கள் நம்புவதில்லை, பொய்யென்றே நினைக்கிறோம். யார்தான் இந்தக் காலத்தில் நம்புகிறார்கள்? இதை ஏன்கைவல்யம் எழுதிக் கொண்டே இருக்கிறார் என்று நீங்கள் சொல்லலாம். புராணத்தைப் பொய்யென்று நினைத்தீர்களே அல்லாமல் புராணத்துள் இருப்பவைகள் பொய்யாகவே இருக்கின்றன. பொய்யான புராணத்துள் இருக்கும் பொய்யான பிராமணனும் தெய்வங்களும் மெய்யாகவே நம் நடுவீட்டிற்குள் விளங்கிக்கொண்டிருக்கின்றன. சொற்பனம்பொய்யானால் அதில்கண்ட பொருளும் பொய்தானே? சொப்பனத்தில் கண்ட பொருள் மெய்யென்கிற பாவனையில் சொற்பனம் பொய் என்பதில் என்னவிசேடம் இருக்கிறது?

வாசகர்களே! வாலிபர்களே! மரத்தின்கிளை, கொப்பு, சல்லிவேர் அறுபட்டாலும் ஆணிவேர் அறுபட்டால்தான் அடிமரம்சாயும். நீங்கள் படித்திருக்கலாம். நான் எழுதுவதையும் படித்து நீங்கள் தெரிந்துகொண்டதுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். அதில் நஷ்டம் ஒன்றுமில்லை. மனுஷிய அபிவிருத்தி என்ற பாதையில் நாமும் ஒரு பாதைகண்டு பிடித்திருக்கிறோம். அந்தப்பாதையில் நடப்பதற்குப் பிராமணதருமமும் புராணநியமமும் வழிநெடுகத்தடைகளாக வரும். அந்தத்தடைகளைப் பலதலைமுறைகளாக நமக்குரிய செல்வம் என்றெண்ணியும், தொழில் செய்தும், இன்புற்றும், தொழுதும் வந்திருக்கிறோம். அவைகள் நம்முடைய இரத்தத்தில் கலந்திருக்கின்றன, சதைக்குள்ளும் இருக்கிறது. நாம் நடக்கும் பாதைக்குக்குறுக்கேவந்துகொண்டிருக்கும். அவைகளைப் பழம் கந்தைத்துணி என்று நீங்கள் கழற்றி எறியவே புராணக்கதை எழுதுகிறேன். நம்மை இனியும் தாழ்த்த நினைப்பவர்கள் புராணத்தைப்பற்றிஎழுதிக்கொண்டே

(அடுத்த பக்கம் பார்க்க)




ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ 4 ½-சேர் ரூ. 2-2-0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

# பேரறிஞர் சாக்ரடீஸ்

[நெடுஞ்செழியன்]

—●—

குன்றுகளும் அவற்றின்மேல் நின்று அரண் செய்யும் கோட்டைகளும், கோபுரங்களும், அவற்றின் சூழலிலே கும்பல் கும்பலாக சூழ்ந்திருக்கும் வீடுகளும் ஏதென்ஸ் நகரை கிரேக்க நாட்டிலேயே ஒரு எழிலுடைய நகராகச் செய்தன. எங்கு பார்க்கினும் பல்வேறு நிறங்களைக் கண்கவரும் முறையிலே உமிழும் கட்டிடங்கள். பலநிற ஆடைகளை அணிந்த ஆடவரும் பெண்டிரும் அங்குமிங்கும் அலைந்து கொண்டு உரையாடியும், சிரித்தும், மகிழ்ந்தும், பேரொலி செய்தவண்ணமாய்ப் பொழுது போக்குவது ஏதென்ஸ் நகருக்கே தனிப்பட்ட சிறப்பாக இருந்து வந்தது. புதுமை சொல்லவும் — கேட்கவும் வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்ட மக்கள்கூட்டங்கூட்டமாகத்தெருக்களில் திரிந்துவந்த தன்மை கி. மு. ஐந்தாவது நூற்றாண்டிலேயே எத்தீனியர்களிடத்தில் காணப்பட்டது. அந்நாளில்தான் ஏதென்ஸ் நகர் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து மூலை முடுக்குகளிலெல்லாம் பண்பாடு பரந்தோங்க ஈடும் எடுப்புமற்று விளங்கியது. அப்போது கோடாளும் மன்றத்தில்மன்னனாட்சி இருக்கவில்லை, குடியாட்சி கொலுவீற்றிருந்தது. உள்நாட்டு வெளிநாட்டு அலுவல்கள் பொதுமன்றத்திலே கூடும் பொது மக்களால் தீர்ப்புச்செய்யப்பட்டன. நூற்றுக்கணக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கூடித் தம் வாக்குகளால் வழக்குகளுக்கு அளிக்கும் தீர்ப்பே அங்கு நீதி. பொதுமக்கள் எல்லோரும் வழக்கறிஞர்களாகவும், அரசியலறிஞர்களாகவும் மதிக்கப்பட்டார்கள். அந்நாளைய எத்தீனியர்களின் எண்ணிக்கைக் குறைவு மக்களின் ஒன்றுபட்ட அறிவையும் நிலைமையையும் எளிதிற் செயற்படுத்தவதுவாயிற்று. யாரும் யாரையும் பார்வையளவிலேனும் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் ஏதென்ஸ் நகர வாழ்வு அமைந்திருந்தது. உயர்ந்த ஆடைகள் அழகு செய்ய உடற்கட்டமைத்த மக்களிடையே நகைச்சுவை பயக்கும் தோற்றத்தோடு அழகற்ற உருவம் ஒன்றும் உலவிக்கொண்டிருந்தது. பருத்த உதடும், சற்றுப்படிந்த மூக்கும், ஒளியுமிழும் கண்களும், உறுதியுடைய வலிய உடற்கட்டும், நெளிந்து அடர்ந்த தாடியும், கோடைக்குப் குளிருக்கும் காப்பளிக்கும் போதிய அளவு பற்றாத ஆடையும் உடைய அந்த உருவம் "கிரேக்கர்களிலேயே பேரறிஞன்" என்ற பெயர் பெற்ற சாக்ரடீசைத் தவிர வேறுயாருமில்லை.

ஒருசிற்பிக்கு, கி. மு. 469ம் ஆண்டில் பிறந்த மகனே பின்னால் சான்றோர் போற்றும் சாக்ரடீஸ் எனத் திகழ்ந்தான். கற்சிற்பியாகத் தன் வாழ்க்கையைத் துவக்கிய சாக்ரடீஸ் மக்களின் சிந்தனையைச்சீர்படுத்தும் சிந்தனைச் சிற்பியாகமாறினார். அறிஞர் எனப்போற்றப்பட்ட அவர் வெங்களம் புகும் வீரராகவுந்திகழ்ந்தார். ஏதென்ஸ் நகரமக்கள் எல்லோரும் போர்க்காலங்களில்போர்ப்பணி புரியவேண்டும்என்றபொது விதிக்கேற்ப மும்முறை ஈட்டி ஏந்தி வெங்களம் புகுந்தார்.

சாக்ரடீஸ்சிறுவயதிலேயேசொற்களின் உண்மையான பொருளையும், பொருள்களின் உண்மையான தோற்றத்தையும் கண்டறிவதில் காலத்தைக்கடத்திவந்தார். கண்டகண்டவற்றையெல்லாம்சிந்தித்துப் பார்க்கத் தொடங்கினார். என்ன, ஏன், எதற்கு என்ற கேள்விகளைக் கேட்டு அறிவூற்றின் ஆழத்தைக் கண்டார். நாளடைவில் அவரது வாழ்வுவீட்டிலில்லாமல்வெளிவாழ்வாகவே அமைந்தது. விடியற்காலையில் வெட்டவெளியில் உலாவப் போவார், பின்னர் மக்கள் திரள் திரளாகக்கூடும் கிரேக்க நாட்டிற்கே தனிச்சிறப்பாக அமைந்த உடற்பயிற்சிக் கூடத்திற்குச் செல்வார். சந்தையில் மக்கட்கூட்டம் சேர்ந்த பிறகு அங்கு செல்வார். மாலையில் மக்களெல்லோரும் ஒன்று சேருகின்ற பொதுவிடங்களுக்குச் செல்வார். சிலவேளைகளில் மண்டபங்களிலும், பூஞ்சோலைகளிலும் காணப்படுவார். அங்கெல்லாம்அவரைச்சுற்றி, நண்பரும், பகைவரும், நொதுமரும், வழிப்போக்காளர்களும், குழுமியிருக்க அறிவுரைக் கேள்விகளை அவர்களிடத்தில் கேட்டவண்ணம் இருப்பார். அவருடைய எடுத்துக்காட்டுகளெல்லாம் அன்றாடவாழ்க்கையில்காணப்படும் நிகழ்ச்சிகளாகவே இருக்கும். அவர் வீசும் ஒவ்வொரு சொல்லும் கேட்டாரைப் பிணிக்கும் தகையதாக அவர்கள் நெஞ்சில் சென்று உறையும். தன் கல்வியறிவின் முதிர்ச்சியால் இழைக்கப்படும் கேள்விகளாகிய வலையில் கேட்பாரைச் சிக்கவைப்பது சாக்ரடீஸிடத்தில் சிறந்து விளங்கிய பண்பாகும். விருந்துகளுக்கும், விழாக்களுக்கும் அடிக்கடிவரும் அழைப்பை ஏற்றுக்கொள்ள அவர் ஒருபோதும் மறக்கமாட்டார். சென்றவிடங்களிலெல்லாம் சிந்தனையைக் கிளறுவதே சாக்ரடீஸுக்கு மகிழ்ச்சியைத்தந்தது. தன் நாற்பத்தேழாவது ஆண்டில் அரிஸ்டோபான்ஸ் (Aristophanes) என்பவர்எழுதிய "முகில்கள்" என்ற நாடக அரங்கிலே திறம்பட நடித்துப்பொதுமக்களின் மதிப்பை பெற்றார். ஒருமுறைபொதுபேரவையின்தலைவராகவும்,மற்றொரு முறைஐந்நூறுபேர் கொண்ட ஆட்சிக்குழுவில் உறுப்பினராகவும் இருந்தார்.

சாக்ரடீஸைமக்களில் ஒருபகுதி விரும்பிய அளவுக்கு மற்றொரு பகுதி வெறுக்கவும்செய்தது.சாக்ரடீஸ் ஆங்காங்கு தங்கி சிறுசிறு சொற்பொழிவுகள் நிகழ்த்தும் போது கேலிசெய்து எக்கொலி கொட்டிநகைப்பாரும்இல்லாமலில்லை. அத்தகையோரெல்லாம் பெரும்பாலும் ஆண்டில் முதியவர்களாகவே காணப்பட்டார்கள். ஆனால் அவரைப் பின்தொடர்வதிலே பற்றுக்கொண்டது அந்நாட்டு இளைஞர் உலகம். சாக்ரடீசைச் சூழ்ந்து நின்ற இளைஞர்களிலேபலர், பணக்காரர்களின் பிள்ளைகளாக இருக்கக்கண்டு சற்று நடுக்கங்கொண்டது வயோதிக உலகம். சாக்ரடீஸின் சொல்லடிகளுக்கு வயோதிக உலகம் அஞ்சினதேயல்லாமல் அதன் கேலிக்கூற்றுகளுக்குச்சாக்ரடீஸ்கிலிகொள்ளவில்லை. ஏதென்ஸ் நகர இளைஞர்களுக்கு சாக்ரடீஸ் ஒரு அறிவுக் களஞ்சியமாகக் காணப்பட்டார். அவர் இளைஞரின் அறிவைத் தூண்டுதற்குரிய கருவியாக விளங்கினாரேயன்றி, அவர்கள் தொழுதற்குரிய கடவுளாகக்காட்சி அளிக்கவில்லை. தான் கண்டதே முந்தமுடிவு என்று எப்பொழுதும் சாற்றினாரில்லை. மனிதன் மனிதருக்குச் செய்யவேண்டிய கடமையை அறிந்து, அறிந்ததை மக்கள்பால் அறிவுறுத்தி வந்தார். மக்களின் வாழ்க்கையிலே குறுக்கிடும் ஒவ்வொன்றைப்பற்றியும் சிந்திக்க முற்பட்ட சாக்ரடீஸ் கிரீக்கிய நாட்டுக் கடவுள்களையும் சமயத்தையும் துருவித்துருவி ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினார். கடவுள் முழுமுதலறிவும், ஆற்றலும், அன்பும், அழகும் கொண்டவர் என்ற முடிவுக்கு வந்து மற்றைப் பல்வேறு கிரீக்கிய கடவுள்களை ஏற்றுக்கொள்ள மறுத்தார். மறுத்ததோடுமட்டுமல்லாமல் இளைஞர் உலகைத் தன் கருத்தினையொட்டி இழுத்துச்சென்றார். இதனைக்கண்டது ஏதென்ஸ். அதனால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. பழமையில் புரண்டுகொண்டிருந்த வயோதிக உலகம்வெகுண்டெழுந்தது. மேலும் ஏதன்ஸ் நகரில் அன்று நிலவியிருந்த ஆட்சிமுறைமாறி தனிப்பட்ட ஒருவனி தன் ஆளுகின்ற முறைவேண்டும் என்று வற்புறுத்தினார்.ஆட்சிமுறையில் தனக்கிருந்த தொடர்பையெல்லாம் நாளடைவில் உதறித்தள்ளினார். இவையெல்லாம் ஒரு சிலருக்குப் பிடிக்கவில்லை. இவ்வாறு சாக்ரடீசுக்கு எதிர்ப்பாக மக்கள் உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த கருத்துக்கள் மெள்ள எரியத் தொடங்கின. இந்த நிலையில் எழுபதாவது ஆண்டு சாக்ரடீஸைத் தழுவிற்று.

கி. மு. 399-ல் சாக்ரடீஸுக்கு எதிர்ப்பாக நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டது. வழக்கினைக் கொண்டு வந்தவர் மெலிடஸ் (Meletus) என்பவர். அவரதுவழக்கு பித்தோஸ் (Pitthos) கூற்றத்தைச் சேர்ந்த மெலிடஸ் மகன் மெலிடஸ் ஆகியநான் அலோபீஸ் (Alopece) கூற்றத்தைச் சேர்ந்த சொவரானிஸ்கஸ் (Sophronieus) மகன் சாக்ரடீஸுக்கு எதிர்ப்பாக இவ்வாழ்க்கை ஆணையிட்டு கூறுகிறேன். இதுகாறும் ஏதென்ஸ் நகர் ஏற்றுக்கொண்டு வந்த மாபெருங் கடவுளரையெல்லாம் பழிச்சொற்களால் தூற்றுவதோடு சாக்ரடீஸ் தன் கருத்திற்குப்பட்ட கடவுளை கற்பித்து வருவது குற்றமாகும். மேலும் இளைஞரின் எண்ணங்களையெல்லாம் மாற்றிவருவது பொறுக்க முடியாத பெருங்குற்றமாகும். இதற்குத் தண்டனை சாவு என்பதாகும். இவ்வழக்கினை ஆய்ந்து காண ஐந்நூறு பேர்கொண்ட அறங்கூறவையம் கூடிற்று. எழுபது ஆண்டுசென்ற சாக்ரடீஸ் நீதிமன்றத்தில்கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். சாக்ரடீஸ் வழக்கினை எதிர்த்து வாதாடுவார் என்று மன்றத்தினர் எண்ணினர். ஆனால் பேரறிஞர்சாக்ரடீஸ்தான் செய்ததாகச் சொல்லப்பட்டவற்றை மெலிடஸ் குற்றம் என்று கூறினாலும் அப்படிச் செய்தல் தன்கடமை என்பதை உணர்ந்துதான் செய்தேன் என்று கூறினார். மாற்றம் கூறும் திறமை

(6-ம் பக்கம் பார்க்க)

---

## இராம இராச்சியம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறார்கள். அதுவுமல்லாமல் மகாத்மா காந்தி அவர்கள் இராம இராஜ்ஜியம் விசேஷம் என்கிறார். அவர் சொல்லுவதில் விசேடம் இருக்குமென்று அநேகர் நினைக்கலாம். ஆனதால் அடுத்த வியாசத்தில் இராம இராஜ்ஜியம் என்றால் என்ன? எப்படி விசேடம் என்பதை எழுதுகிறேன். பண்டித சாஸ்திரிகள் தெரிந்து கொள்ளட்டும். நீங்களும் படியுங்கள். நான் எழுதினது சரியல்ல என்று மூலை முடுக்கில் சொல்லாமல் எல்லோரும் தெரியும்படியாக இராமாயணப் பண்டிதர்கள் சொல்லட்டும். ஆதி சமயக்கர்த்தாக்களெல்லாம் சேர்ந்துவந்து சாட்சி சொன்ன போதிலும் அதற்காக ஒரு கணக்கின் ஒழுங்கு அதிகபலம் பெற்று விடுமோ? விடாது என்பதை மகாத்மா காந்தி அவர்களும் அறிவார்.




உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.







Edited Printed and Published by C N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317–319 Hodgsonpet, Conjeeveram.